# ஸ்ரீ கிருஷ்ண தரிசனம்

மலர் 2, இதழ் 1 ஜனவரி / பிப்ரவரி 2010




2 மகிழ்ச்சி: கிருஷ்ணரால் மட்டுமே சாத்தியம்




ஸ்ரீ ஜகந்நாதர் ஜகத்தில் தோன்றிய வரலாறு 7





12 குருடர்களும் யானையும்



ஆன்மீக ஆனந்தத்தின் திருவிழா 14



18 சித்தாந்தத்திற்காகப் போராடிய பக்திசித்தாந்தர்



புலன்களைத் தூய்மைப்படுத்தும் விக்ரஹ வழிபாடு 25

22 மொரீசியஸ் நாட்டில் புதியதோர் கிருஷ்ண ஆலயம்

23 உலகமே கொண்டாடும் தேர் திருவிழா

29 ஸ்ரீமத் பாகவதம்

31 தத்துவத் துளிகள்

31 கௌடிய வைஷ்ணவ நாள்காட்டி

32 தமிழகத்திலுள்ள இஸ்கான் கோவில்களின் முகவரிகள்



# ஸ்ரீ கிருஷ்ண தரிசனம்

**ஹரே கிருஷ்ண இயக்கத்தின் பத்திரிகை**

ஸ்ரீ ஸ்ரீமத் பக்திசித்தாந்த சரஸ்வதி தாகூர் அவர்களின் கட்டளையின்படி தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர், 1944ல் Back to Godhead என்ற பெயரில் ஓர் ஆங்கில பத்திரிகையை தொடங்கினார், அஃது இன்று வரை அவரைப் பின்பற்றுபவர்களால் நடத்தப்பட்டு வருகிறது. அப்பத்திரிகைக்கு அவரளித்த வழிகாட்டுதலைப் பின்பற்றி தமிழில் வெளிவருவதே *ஸ்ரீ கிருஷ்ண தரிசனம்.*


**தலைமை:** விஜய கோவிந்த தாஸ்
**தொகுப்பாசிரியர்:** ஸ்ரீ கிரிதாரி தாஸ்
**பிழைத் திருத்தம்:** சனக குமார தாஸ், பிரியதர்ஷினி ராதா தேவி தாஸி, ஜெய கிருஷ்ண தாஸ், ஜெய கோவிந்தராம தாஸ்
**தட்டச்சு உதவி:** கோப-கோபிநாத தாஸ், விசித்ரா
**வெளியிடுவோர்:** பக்திவேதாந்த புத்தக அறக்கட்டளை, சென்னை.



**அலுவலகம்:** மனை எண் 9-10, செந்தில் அவன்யூ, காமராஜபுரம், செம்பாக்கம், சென்னை - 600073. போன்: (044) 22272920

**மின்னஞ்சல்:** btgtamil@pamho.net



**அச்சிட்டோர்:** கலர் பிரிண்டர்ஸ், சென்னை.



**பதிப்புரிமை** © 2010, பக்திவேதாந்த புத்தக அறக்கட்டளை. அனைத்து உரிமைகளும் பதிப்பகத்தாருக்கு மட்டுமே.


பக்திவேதாந்த புத்தக அறக்கட்டளை

# வணக்கம்

ஆங்கிலப் புத்தாண்டில் அடியெடுத்து வைக்கும் அனைவருக்கும் எமது நல்வாழ்த்துகள். ஒவ்வொரு நாளின் சூரிய உதயமும் அஸ்தமனமும் நம்மை மரணத்தை நோக்கிக் கொண்டு செல்கின்றன என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. குறிப்பாக, வருடங்கள் கடந்து செல்லும்போது, அந்த வருடத்தை கிருஷ்ண பக்தியில் கழித்தோமா அல்லது வீணாக பலனின்றி புலனின்பத்தில் கழித்தோமா என்பதை நாம் ஆய்வு செய்ய வேண்டியது அவசியம். வேதங்களின் உயர்ந்த வார்த்தைகளால் புகழப்படும் புருஷோத்தமரின் தொண்டில் நாம் நமது வருடங்களை கழிக்கவில்லையெனில், நமது வாழ்வு பயனற்றதாகும். அந்த புருஷோத்தமரின் புகழை பண்டிதர் முதல் பாமரர் வரை பாரெங்கும் பரப்புவதில் எமது ஸ்ரீ கிருஷ்ண தரிசனத்தின் பங்கு நிச்சயம் உண்டு என்று நம்புகிறோம்.


இந்த ஜனவரி/பிப்ரவரி இதழ், தமிழகத்தின் இரு மாநகரங்களில் (சென்னை, கோயம்புத்தூர்) இஸ்கான் கோவில்களின் சார்பில் நடைபெறவுள்ள ஸ்ரீ ஜகந்நாதர் ரதயாத்திரையை கருத்தில் கொண்டு அது குறித்த தகவல்களை வழங்கும்படி அமைக்கப்பட்டுள்ளது.

எளிமையான படங்களுடன் கூடிய உபதேசக் கதைக்கு நல்வரவேற்பு இருப்பதால், இந்த இதழிலும் படக்கதை ஒன்று இடம் பெற்றுள்ளது. ஸ்ரீல பிரபுபாதரின் குருவான ஸ்ரீல பக்திசித்தாந்த சரஸ்வதி தாகூர் தோன்றிய திருநாள் பிப்ரவரி மாதத்தில் வருவதால், அவரது அருஞ்செயல்களை அனைவருக்கும் கொண்டு செல்ல ஒரு சிறு கட்டுரையும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.


—ஸ்ரீ கிரிதாரி தாஸ், தொகுப்பாசிரியர்

## எமது குறிக்கோள்

- உண்மை, போலி; ஆன்மீகம், பௌதிகம்; நிரந்தரமானவை, தற்காலிகமானவை—ஆகியவற்றைப் பிரித்துப் பார்க்கும் அறிவொளியை மக்களுக்கு வழங்குதல்
- ஜட வாழ்வின் தவறுகளை பகிரங்கப்படுத்துதல்
- ஆன்மீக வாழ்வின் வேத நுணுக்கங்களில் மக்களை வழிகாட்டுதல்
- வேதப் பண்பாட்டைப் பாதுகாத்து அதனைப் பரப்புதல்
- பகவான் ஸ்ரீ சைதன்ய மஹாபிரபுவினால் வழங்கப்பட்ட இறைவனின் திருநாம உச்சாடனத்தைப் பரப்புதல்
- முழுமுதற் கடவுளான ஸ்ரீ கிருஷ்ணரை நினைப்பதற்கும் அவருக்குத் தொண்டு செய்வதற்கும் உதவி செய்தல்



புருஷோத்தமரான முழுமுதற் கடவுள் ஸ்ரீ கிருஷ்ணர்



ஹரே கிருஷ்ண கீர்த்தனத்தை தோற்றுவித்த கிருஷ்ணரின் அவதாரம், ஸ்ரீ சைதன்ய மஹாபிரபு



தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர், அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் ஸ்தாபக ஆச்சாரியர்

# மகிழ்ச்சி: கிருஷ்ணரால் மட்டுமே சாத்தியம்

**வழங்கியவர்: தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர்**
**அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் ஸ்தாபக ஆச்சாரியர்**

கடவுள் யார் என்பதை முறையாக அறிந்துகொள்ளாமல் போலி நபர்களை கடவுளாக ஏற்று பலரும் ஏமாற்றமடைகின்றனர். ஆனந்தத்தை தேடி அலையும் அவர்கள் உண்மையான ஆனந்தத்தை அணுகாத காரணத்தினால் தோல்வியடைகின்றனர். உண்மையை அணுகி வாழ்வில் வெற்றி பெற இதோ சில வழிமுறைகள்.



ஏகோனவிம்ஷே விம்ஷதிமே
வ்ருஷ்ணிஷு ப்ராப்ய ஜன்மனீ
ராம-க்ருஷ்ணாவ் இதி புவோ
பகவான் அஹரத் பரம்

“பகவான் தனது பத்தொன்பதாவது மற்றும் இருபதாவது அவதாரத்தில் பலராமராகவும் கிருஷ்ணராகவும் விருஷ்ணி குலத்தில் (யது வம்சத்தில்) தோன்றி உலக பாரத்தைக் குறைத்தார்.” (ஸ்ரீமத் பாகவதம் 1.3.23)

### வாழ்வில் வெற்றி பெற

எங்கிருந்து வேண்டுமானாலும் கிருஷ்ணர் தோன்றலாம், இருப்பினும் அவர் விருஷ்ணி குலத்தை தேர்ந்தெடுத்தார். முதலில், பலராமர் விருஷ்ணி குலத்தில் தோன்ற, பின்னர் கிருஷ்ணர் தோன்றினார். கிருஷ்ணரின் ஒரு பெயர், வார்ஷ்ணேயர்; விருஷ்ணி குலத்தில் தோன்றியதால், கிருஷ்ணர் அவ்வாறு அழைக்கப்படுகிறார். சந்தன மரங்கள் எங்கு வேண்டுமானாலும் வளரலாம், ஆனால் அவை முன்பு மலேசியாவில் அதிகமாக விளைவிக்கப்பட்டன, அதனால் அந்த சந்தனக் கட்டைகள் மலயஜ-சந்தன-கட்டைகள் என்று அறியப்பட்டன. அதுபோல, விருஷ்ணி குலத்தில் தோன்றியதால், கிருஷ்ணரும் வார்ஷ்ணேயர் என்று அறியப்படுகிறார். ஆனால் கிருஷ்ணரின் பிறப்பும் செயல்களும் சாதாரணமானவை அல்ல, அவை தெய்வீகமானவை.

ஜன்ம கர்ம ச மே திவ்யம் ஏவம் யோ வேத்தி தத்த்வத:. ஒருவர் கிருஷ்ணரை அவ்வாறு புரிந்து கொண்டால், உண்மையாகப் புரிந்து கொண்டால், அதன் விளைவு—த்யக்த்வா தேஹம் புனர் ஜன்ம நைதி—"அவர் தனது தற்போதைய உடலை விட்ட பிறகு, வேறொரு ஜடவுடலை எடுப்பதில்லை," என்று கிருஷ்ணர் கூறுகிறார். மாம் ஏதி, அவர் தன்னிடம் வருவதாகக் கூறுகிறார். அதுவே, வாழ்வின் வெற்றி. நீங்கள் குறைந்தபட்சம், கிருஷ்ணரின் தெய்வீக தோற்றத்தையும் செயல்களையும் புரிந்துகொள்ள முயற்சித்தால் போதும், உங்கள் வாழ்க்கை வெற்றியடையும்.

## இன்பத்திற்காகப் போராடுவதே ஜட வாழ்வு

கிருஷ்ண பக்தி இயக்கத்தின் நோக்கம், மக்களுக்கு கிருஷ்ணரைப் பற்றி புரிய வைப்பதுதான். கிருஷ்ணரைப் புரிந்து கொண்டாலே ஜட வாழ்வின் சிக்கலிலிருந்து ஒருவர் விடுபடுவார். நாம் ஒவ்வொருவரும் கட்டுப்பாடுகளிலிருந்து வெளிவர முயற்சிக்கிறோம். "நான் ஒருசில சூழ்நிலைகளால் கட்டுண்டு இருக்கிறேன். இதிலிருந்து நான் வெளியேற வேண்டும்," என்று நாம் ஒவ்வொருவரும் நினைக்கிறோம். இந்த பந்தத்தை முடிவிற்குக் கொண்டு வருதல், ஆத்யந்திக-து:க-நிவ்ருத்தி என்று அழைக்கப்படுகிறது. து:க நிவ்ருத்தி என்றால், துக்கமான சூழ்நிலைகளைத் தவிர்ப்பதாகும். ஒவ்வொருவருமே துன்பமான சூழ்நிலைகளைத் தவிர்க்க விரும்புகிறோம். துன்பத்தைத் தவிர்க்க நாம் போராடுகிறோம், அதுவே உண்மை. எனக்கு சுமாரான வருமானம், உதாரணமாக இரண்டாயிரம் ரூபாய் என்றால், அஃது எனக்குப் போதுமானது அல்ல. நான் பத்தாயிரம் ரூபாய் வேண்டிப் போராடுகிறேன், துன்பகரமான சூழ்நிலை விலகிவிடும் என்று எதிர்பார்க்கின்றேன். ஆனால், என்னிடம் பத்தாயிரம் ரூபாய் இருக்கும்போது, நான் மற்றொரு துன்பத்தை அனுபவிக்கின்றேன். அதன் பின், இருபதாயிரம் ரூபாய்க்கு முயற்சிக்கிறேன். இவ்வாறு நான் என் வருமானத்தை பெருக்கிக் கொண்டே செல்கிறேன். ஆனால் அந்த துன்பகரமான சூழ்நிலையோ ஒருபோதும் குறைந்தபாடில்லை. பணத்தினால் துன்பம் குறைந்துவிடும் என்றால், கோடீஸ்வரர்கள் ஏன் தற்கொலை செய்து கொள்கிறார்கள்? அவர்களிடம் பணம் உள்ளது. ஆனால் பணத்தினால் அடையப்படும் பௌதிக வசதிகள் அவர்களை சந்தோஷப்படுத்த முடியாது என்பதை அவர்கள் அறிவதில்லை.

**நாங்கள் ஒவ்வொருவரும் பல்வேறு பணிகளில் ஈடுபட்டுள்ளோம்: ஒருவர் எழுதுகிறார், ஒருவர் அதனை டைப் செய்கின்றார், வேறொருவர் புத்தகங்களை விநியோகம் செய்கிறார், மற்றவர் பிரசாதம் சமைக்கிறார், ஒருவர் சுத்தம் செய்கிறார், ஒருவர் சங்கீர்த்தனம் செய்கிறார். ஒரு க்ஷணம்கூட நாங்கள் சோம்பேறியாக இருப்பதில்லை. நாங்கள் கிருஷ்ணருக்காக உழைப்பதால், அந்த உழைப்பு எங்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கிறது. இங்கு யாருக்கும் காலணாகூட சம்பளம் கொடுக்கப்படுவதில்லை.**

இந்தியா ஓர் ஏழை நாடாக விளம்பரப்படுத்தப்படுகிறது. ஆனால் மற்ற இடங்களுடன் ஒப்பிடும்போது, இந்தியாவிலுள்ள பெரும்பாலான மக்கள் மகிழ்ச்சியாகவே உள்ளனர். பௌதிக மாகப் பார்த்தால், இந்தியர்களிடம், குறிப்பாக கிராமவாசிகளிடம் உடுத்து வதற்கு இரண்டு துணிகளைத் தவிர மற்ற உடமைகள் இல்லை. ஆயினும் அவர்கள் வேதக் கொள்கைகளைப் பின்பற்று கின்றனர்; அதிகாலையில் குளித்து தங்கள் தொழிலுக்குச் செல்கின்றனர்; கிடைப்பதை உண்டு அவர்கள் மகிழ்ச்சியாக உள்ளனர். அவர்களை ஆதிகால மனிதர்கள் என்று தற்கால மக்கள் கூறுகின்றனர். ஆனால் தற்கால மக்கள் முன்னேறியவர்களா என்ன? முன்னேறிய நாகரிகம் என்றால், அவன் ஏன் தற்கொலை செய்து கொள்கின்றான்?

## உண்மையான மகிழ்ச்சி

உண்மையான மகிழ்ச்சி என்றால் என்ன என்பதை மக்கள் அறியாமல் இருப்பதாலேயே இப்போராட்டம் தொடர் கிறது. ந தே விது: ஸ்வார்த்த கதிம் ஹி விஷ்ணும், (ஸ்ரீமத் பாகவதம் 7.5.31) உண்மையான மகிழ்ச்சி விஷ்ணுவிடம் உள்ளது என்பதை மூடர்கள் அறியார்கள். கிருஷ்ணரது மகிழ்ச்சியே எமது மகிழ்ச்சி, கிருஷ்ணருக்காக நாங்கள் இரவுபகலாக உழைக்கிறோம். பக்தர் அல்லாதவர்களான கர்மிகளும்கூட இரவுபகலாக உழைக்கின்றனர், ஆனால் அவர்கள் மகிழ்ச்சியாக இல்லை. நாங்கள் மகிழ்ச்சியாக உள்ளோம். அஃது அவர்களுக்குத் தெரியாது. அவர்கள் செய்யும் அதே செயல்களையே நாங்களும் செய்கிறோம். நாங்கள் சோம்பேறியாக இருப்பதில்லை, தூங்கிக் கொண்டிருப்பதில்லை. நாங்கள் ஒவ்வொருவரும் பல்வேறு பணிகளில் ஈடுபட்டுள்ளோம்: ஒருவர் எழுதுகிறார், ஒருவர் அதனை டைப் செய்கின்றார், வேறொருவர் புத்தகங்களை விநியோகம் செய்கிறார், மற்றவர் பிரசாதம் சமைக்கிறார், ஒருவர் சுத்தம் செய்கிறார், ஒருவர் சங்கீர்த்தனம் செய்கிறார். ஒரு க்ஷணம்கூட நாங்கள் சோம்பேறியாக இருப்பதில்லை. நாங்கள் கிருஷ்ணருக்காக உழைப்பதால், அந்த உழைப்பு எங்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கிறது. இங்கு யாருக்கும் காலணா கூட சம்பளம் கொடுக்கப்படுவதில்லை. சரியாகச் சொன்னால் ஒவ்வொருவரும் பணத்தைக் கொண்டு வருகின்றனர். இருப்பினும், ஒவ்வொருவரும் மகிழ்ச்சி யாக உள்ளோம். கர்மிகளோ பணம் சம்பாதிக்கும்போதிலும், சந்தோஷமாக இல்லை. இது நடைமுறையில் நாம் காணக்கூடிய ஒன்றாகும்.

சில நேரங்களில், எங்களுடன் இருப்பவரை, சில காரணங்களுக்காக "இங்கு நீங்கள் தங்க முடியாது" என்று கூறி வெளியில் அனுப்பிவிடுகிறோம். ஆனால், கிருஷ்ண உணர்வின் மகிழ்ச்சியை அவர் அனுபவித்திருப்பதால், அவரால் வெளியில் தங்க இயலாது. மகிழ்ச்சி இல்லையெனில், ஏன் இவர்கள்

எங்களுடன் ஒட்டிக் கொண்டிருக்க வேண்டும்? இங்கிருந்து வெளியில் சென்று மீண்டும் நம்மிடம் திரும்பி வந்தவர்கள் வெளியில் எந்த சந்தோஷத்தையும் பார்த்திருக்க வாய்ப்பில்லை. மக்கள் சொல்லலாம்: "அவர்கள் முட்டாள்கள், ஏதோ ஒரு எண்ணத்துடன் செயல்பட்டுக் கொண்டுள்ளனர்." ஆனால் கிருஷ்ண உணர்வில் இருப்பவர்கள் சந்தோஷமாக இருக்கிறார்கள், அவர்கள் கண்டிப்பாக சந்தோஷமாக இருக்க வேண்டும், மற்றவர்கள் இதனை உணர்வதில்லை. *ந தே விது: ஸ்வார்த்த கதிம் ஹி விஷ்ணும்*, மகிழ்ச்சியடைவது எவ்வாறு என்பதை பக்தர் அல்லாதோர் அறிவதில்லை.

நீங்கள் கடவுளின் அம்சம் என்பதால், கடவுளிடம் வரும்போது மட்டுமே மகிழ்ச்சியடைய முடியும். உதாரணமாக, ஒரு சிறு குழந்தை அழும்போது, அவனை சாந்தப்படுத்த யாராலும் முடியாது. ஆனால் தாயின் மடியை அடைந்தவுடன் அவன் மகிழ்ச்சியடைகிறான். குழந்தை யானவன் தாயின் ஓர் அம்சம் என்பதால், அவன் இதனை உடனே அறிகின்றான்: "என் அன்னையிடம் நான் பாதுகாப்பில் உள்ளேன்." அதுபோலவே, நாம் அனைவரும் கடவுள் விஷ்ணுவின் அம்சங்கள். எனவே, நாம் கிருஷ்ணர் அல்லது விஷ்ணுவிடம் வந்தாலொழிய மகிழ்ச்சியடைய முடியாது. அது நடைமுறையில் சாத்தியமல்ல. ஆனால் ஜட மூடர்களுக்கு இது தெரியாது. அவர்கள் விஞ்ஞான முன்னேற்றம் என்ற பெயரில் மகிழ்ச்சியடைய முயல்கின்றனர்.

## துன்பமற்ற தளம்

மகிழ்ச்சி என்னும் தளத்திற்கு வருவதே வாழ்வின் குறிக்கோள். அங்கு துன்பங்கள் ஏதுமில்லை. சந்தோஷம் மட்டுமே. *ஆனந்தமயோ (அ)ப்யாஸாத்* அதுவே எங்கள் குறிக்கோள். நீங்கள் கிருஷ்ணருடைய பல படங்களைப் பார்த்திருப்பீர்கள்: கிருஷ்ணர், மாடு மேய்க்கும் சிறுவர்களுடன் விளை யாடுகிறார், தோழியருடன் நடன மாடுகிறார், வெண்ணை திருடுகிறார், இன்னும் பற்பல செயல்களில் ஈடுபடு கிறார். அவையனைத்தும் ஆனந்தத்துடன் செய்யப்படுகின்றன. கிருஷ்ணரை வருத்தம் தோய்ந்த முகத்துடனோ, உட்கார்ந்து அழுவது போன்றோ நாம் காண முடியாது. ஓர் அசுரனைக் கொல்லும்போதுகூட சிரித்துக் கொண்டே, சுலபமான வேலையை செய்வது போன்று செய்கிறார். அவர் கொல்கிறாரா நடனம் ஆடுகிறாரா என்று நினைக்கத் தோன்றுகிறது. அவர் எப்போதும் ஆனந்தமாக இருக்கிறார்.

மிகவுயர்ந்த ஆனந்தத்தைப் பற்றிய செய்தியை நாங்கள் ஆனந்தத்துடன் அளிக்கின்றோம். *ஆனந்த மயோ (அ)ப்யாஸாத்*, என்று வேதாந்த சூத்திரம் (1.1.12) கூறுகிறது. "தனி ஆத்மா மற்றும் பரமாத்மாவின் இயல்பு ஆனந்தமாக இருப்பதுவே." ஆன்மீக வாழ்க்கை என்றால் ஆனந்தம், மகிழ்ச்சி. அந்த ஆனந்தத்தினை உயர் அதிகாரியுடன் ஒத்துழைப்பதன் மூலமே அடைய முடியும்.

நாம் நெருப்பின் பொறியைப் போன்றவர்கள். சில சமயத்தில் இப்பொறிகள் அழகாகத் தோன்றுகின்றன. ஆனால் இவை நெருப்பிலிருந்து கீழே விழும்பொழுது அவற்றின் உக்கிரத்தன்மை உடனடியாக அணைக்கப்பட்டு விடுகிறது. நம்முடைய வாழ்வும் அதுபோன்றதே. கிருஷ்ணரின் சகவாசத்தை விட்டுவிட்டு, நாம் இந்த ஜடவுலகில் மகிழ்ச்சியாக இருக்க விரும்பினோம்; அதனால் நாம் துன்பப்படுகிறோம்.

இந்த பொறியை, இந்த கார்பன் துகளை, நீங்கள் மீண்டும் நெருப்பில் இட்டால், அது மீண்டும் நெருப்பாக கனக்கும், செந்நிற கொழுந்தாக மாறும். இந்த கிருஷ்ண பக்தி இயக்கத்தில், அவ்வாறு நெருப்பிலிருந்து வீழ்ந்த பொறிகளைத் தேர்ந்தெடுத்து மீண்டும் அவற்றை நெருப்பிலிட நாங்கள் முயற்சிக்கிறோம். அந்த நெருப்பிடம் திரும்பிச் செல்வதே ஆனந்தம்.

## கடவுளுக்குரிய பரிசோதனை

இந்த ஸ்லோகத்தில் *ராம-க்ருஷ்ணாவ் இதி* என்று சொல்லப் பட்டுள்ளது. கடவுள் பலராமராகவும் கிருஷ்ணராகவும் தோன்றினார். இதுபோன்ற பெயர் கொண்ட போலிகளால் சில முட்டாள் மக்கள் தவறாக வழிநடத்தப்படுகின்றனர். அத்தகு அயோக்கியர்கள், தங்களையே இராமராகவும் கிருஷ்ணராகவும் பிரகடனப்படுத்துகின்றனர், அயோக்கிய மக்களும் அவர்களை நம்புகின்றனர். கடவுளுக்கென்று சில அறிகுறிகள் இருக்க வேண்டும். அதற்கு என்ன சோதனை? *பகவான் அஹரத் பரம்*, இதுவே சோதனை. கடவுள் இந்த பூமி பாரத்தை நீக்க முடியும். கிருஷ்ணரும் பலராமரும் தோன்றியபோது, பலராமர் இந்த உலகம் அமைதியாக இருப்பதற்காக பல அசுரர்களைக் கொன்றார். பிறந்ததில் இருந்தே, கிருஷ்ணர், பூதனா, அகாசுரன், பகாசுரன், கேசி, மற்றும் பல அசுரர்களைக் கொன்றார். ஒவ்வொரு நாளும் கிருஷ்ணரும் பலராமரும் காட்டிற்குச் செல்வது வழக்கம், அப்போது யாராவது ஓர் அசுரன் அவர்களைத் தொந்தரவு செய்வான், கிருஷ்ணர் அவனைக் கொன்று விடுவார். கிருஷ்ணருடைய நண்பர்கள் வீட்டிற்கு வந்து நடந்த கதையை தங்களது தாயிடம் விவரிப்பர்: "அம்மா, கிருஷ்ணர் மிகவும் அற்புதமானவர், அவ்வளவு பெரிய அரக்கன் வந்தான், கிருஷ்ணர் இப்படியும் அப்படியுமாக அவனைக் கொன்றுவிட்டார்." அவரே கிருஷ்ணர். இத்தகு அற்புத செயல்களைச் செய்யாமல், ஏதோ தியானம் செய்கிறார், அவர் கிருஷ்ணராக மாறுகிறார் என்று கூறக் கூடாது. ஒருவர் கிருஷ்ணர் அல்லது இராமர் என்பதற்கு என்ன சோதனை? மூடர்கள் பிரமாணத்தை எடுத்துக் கொள்வதில்லை. அவர்கள் வெறுமனே ஓர் ஏமாற்று நடிகனை கிருஷ்ணர் அல்லது இராமர் என்று கருதிவிடுகின்றனர்.

பலராமரும் கிருஷ்ணரும் சாக்ஷாத் பகவானே. தங்களை முழுமுதற் கடவுளாக அவர்கள் நிரூபித்துள்ளனர். அவர்கள் புற்றுநோயினால் கொல்லப்படக்கூடிய "இராம-கிருஷ்ணர்" அல்ல. அத்தகு இராம-கிருஷ்ணரை நாங்கள் பின்பற்ற விரும்பவில்லை. உண்மையான இராம-கிருஷ்ணர் இருக்கையில், போலியான இராம-கிருஷ்ணரிடம் நான் ஏன் செல்ல

வேண்டும்? அதே கடவுள் என்று சிலர் கூறலாம், ஆனால் நான் ஏன் நம்ப வேண்டும்? அதே நபர் என்பதற்கான சான்றுகள் எங்கே?

நாம் ஏமாற்றப்படுவதில் இருந்து தப்புவதற்கு புத்திசாலித்தனமாக இருக்க வேண்டும். க்ருஷ்ண ஏய் பஜே சேய் பத சதுர, புத்திசாலியாக இல்லாத பட்சத்தில் கிருஷ்ணரிடம் யாரும் சரணடைய முடியாது. பகவத் கீதையின் (7.19) படி,

பஹூனாம் ஜன்மனாம் அந்தே
க்ஞானவான் மாம் ப்ரபத்யதே
வாஸுதேவ: ஸர்வம் இதி
ஸ மஹாத்மா ஸுதுர்லப:

"பற்பல பிறவிகளைக் கடந்த பிறகு, யாரொருவன் புத்திசாலியோ, அவன் எல்லா காரணங்களுக்கும் காரணமாக என்னை (கிருஷ்ணரை) அறிந்து சரண டைகிறான்."



## நாம் ஏமாற்றப்பட மாட்டோம்

ஒவ்வொருவரும் கிருஷ்ணருக்குப் போட்டியாக யாரேனும் ஒருவரை முன்நிறுத்த முயல்கின்றனர். "ஓ, ஏன் அந்த கிருஷ்ணர்? இங்கு பார்! இன்னொரு கிருஷ்ணர் இருக்கிறார், பெரிய தாடி யுடன்." இதுபோன்ற கிருஷ்ணர் முட்டாள் களுக்குரியவர், அத்தகு கிருஷ்ணரை முன்நிறுத்துபவர்களும் முட்டாள்களே.

பகவான் கிருஷ்ணர் பகவத் கீதையில் (7.16) கூறுகிறார்:

*சதுர்-விதா பஜந்தே மாம்*
*ஜனா: ஸு$^{}$க்ருதினோ (அ)ர்ஜு$^{}$ன*
*ஆர்தோ ஜிக்ஞாஸு$^{}$ர் அர்தார்தீ*
*க்ஞானி ச பரதர்ஷப*

துன்பத்தில் இருப்போர், செல்வம் வேண்டுவோர், கேள்வியுடையோர், புத்திசாலிகள் ஆகிய நான்குவிதமான மனிதர்கள் நல்லோர்களாக இருக்கும் பட்சத்தில் கடவுளிடம் வருகின்றனர். ஒரு சாதாரண மனிதன் நல்லவனாக இருந்தால், அவன் கடவுளிடம் பிரார்த்தனை செய்கிறான்: "எம்பெருமானே! நான் துன்பத்தில் இருக்கிறேன். தயவுசெய்து என்னைக் காப்பாற்றுங்கள்." அல்லது யாரேனும் ஒருவருக்கு செல்வம் தேவைப்பட்டால் அவரும் கடவுளை அணுகுகிறார்: "என் பிரியமான பெருமாளே! பணத் தேவையால் நான் துன்பப்படுகிறேன். தயவுசெய்து சிறிது செல்வத்தைத் தாருங்கள்." ஞானிகள் ஞானத்தை அடைவதற்காக கடவுளை அணுகு கின்றனர். "கடவுளின் நிலை என்ன? கடவுள் என்றால் யார்?" என்று கேள்வியுடையோர் விசாரணை செய்கின்றனர்.

இந்த நான்கு பிரிவினரும் கடவுளைப் புரிந்துகொள்ளவோ அணுகவோ முயல்கின்றனர். இந்த நான்கில், துன்பத்தில் உள்ளோரும் செல்வத்திற்கான தேவை உள்ளோரும், அவர்களின் துன்பம் முடிவிற்கு வந்தவுடன், அல்லது செல்வத்திற்கான தேவை பூர்த்தி செய்யப்பட்டவுடன், கடவுளை மறந்து விடுகின்றனர். ஆனால் கேள்வியுடையவர்களும் ஞானிகளும் தொடர்ந்து கடவுளைத் தேட முயல்கின்றனர். இந்த இரு வகுப்பினரில், கடவுள் என்றால் என்ன என்பதை புரிந்துகொள்பவன் முழுமையடைகிறான். இது பற்பல பிறவிகளுக்குப் பிறகே சாத்தியப்படுகிறது. பற்பல பிறவிகளுக்குப் பின் ஒருவர் எந்த விதமான அறிவைப் பெறுகிறார்? *வாஸுதேவ: ஸர்வம் இதி*, வாசுதேவரான கிருஷ்ணரே எல்லாம் என்ற அறிவை அவர் பெறுகிறார். கிருஷ்ணரே எல்லாம் என்று ஒப்புக் கொள்பவர் மிகவும் அரிதானவர், அவரே மகாத்மா. அத்தகு மகாத்மாக்களை போலி கிருஷ்ணர்கள் தவறான வழிக்கு அழைத்துச் செல்ல முடியாது. அவர்கள் உண்மையான கிருஷ்ணரிடம் நம்பிக்கையுடையவர்களாக இருக்கின் றனர். கிருஷ்ணர் விருஷ்ணி குலத்தில் அவதரித்தார், நம்முடைய வேலை கிருஷ்ணரைப் புரிந்துகொள்வதே. கிருஷ்ணரை முழுமையாகப் புரிந்து கொள்ள முடியாது. அவர் அளவிட முடியா தவர், இருப்பினும் மாபெரும் பக்தர்களின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுவதன் மூலம், நாம் கிருஷ்ணர் யார் என்பதை ஓரளவிற்குப் புரிந்து கொள்ளலாம்.

> **நம்முடைய வேலை கிருஷ்ணரைப் புரிந்துகொள்வதே. கிருஷ்ணரை முழுமையாகப் புரிந்து கொள்ள முடியாது. அவர் அளவிட முடியாதவர், இருப்பினும் மாபெரும் பக்தர்களின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுவதன் மூலம், நாம் கிருஷ்ணர் யார் என்பதை ஓரளவிற்குப் புரிந்து கொள்ளலாம்.**

நமது உண்மையான நோக்கம், கிருஷ்ணரை நேசிப்பதாகும், கிருஷ் ணரின் இடையர் குலத் தோழிகளான கோபியர்களுக்கு, கிருஷ்ணர் கடவுள் என்பது தெரியாது. அவரது இடையர் குலச் சிறுவர்களுக்கும் தெரியாது. சொல்லப் போனால் அன்னை யசோதைக்கும் கிருஷ்ணரே முழுமுதற் கடவுள் என்பது தெரியாது. அவர்கள் கிருஷ்ணரிடம் காட்டிய அன்பு இயல்பானது, கிருஷ்ணரைத் தவிர வேறெதையும் அவர்கள் அறியார்கள். அந்த நிலைக்கு நீங்கள் வந்தால் அதுவே பக்குவம்.

நாம் கடவுளைப் பற்றி தெரிந்து கொள்ள முடியுமா? நமக்கு என்ன தெரியும்? கடவுளைத் தெரிந்து கொள்ளும் அளவிற்கு நம்மிடம் அறிவுள்ளதா? ஆனால் நாம் கடவுளை அவரது செயல்களின் மூலம் காணலாம். கிருஷ்ணர் தோன்றிய போது, அவரது செயல்கள் அனைத்தும் அசாதாரணமானவையாக இருந்தன. அவர் மானிடர் அல்ல, ஆனால் ஒரு மனிதரைப் போல் நடித்தார். மனிதர்கள் திருமணம் செய்கின்றனர், கிருஷ்ணரும் திருமணம் செய்து கொண்டார். ஆனால் அவரது திருமணம் ஆச்சரியமானது, அவர் 16,108 பெண்களை மணம் முடித்தார். அஃது அசாதாரணமானது. யாராலும் அவ்வாறு திருமணம் செய்ய இயலாது. இஸ்லாமிய நவாப்கள் பல பெண்களை மணம் முடிப்பதுண்டு. ஒரு நவாப் 160 பெண்களை மணம் செய்து கொண்டார், ஆனால் அவரால் எல்லா மனைவியரையும் ஒரே சமயத்தில் அணுக இயலவில்லை. அது நடைமுறையில் சாத்தியமற்றது. ஆனால் கிருஷ்ணர் அவ்வாறல்ல. அவர் தன்னை 16,108 உருவங்களாக விரிவாக்கம் செய்து, ஒவ்வொரு மனைவியையும் திருப்தி செய்தார்.

இவ்வாறாக, கிருஷ்ண பலராம அவதாரங்களைப் பற்றிய வர்ணனைகள் ஸ்ரீமத் பாகவதத்தில் விவரிக்கப்பட்டுள்ளன. அவர்களின் அறிகுறிகள், தாய் தந்தையரின் பெயர், இடம், செயல்கள் என எல்லாமே விவரிக்கப்படுகின்றன. பொய்யான அவதாரங்களால் நாங்கள் ஏமாற்றப்படமாட்டோம். அது சாத்தியமல்ல. யார் ஏமாற்றப்பட விரும்புகிறார்களோ அவர்களே ஏமாற்றப்படுவர். ஆனால் நாங்கள் ஏமாற்றப்பட விரும்பவில்லை. உண்மையான கடவுள் மட்டுமே எங்களுக்கு வேண்டும். எனவே, யாரும் எங்களை ஏமாற்ற முடியாது.

மிக்க நன்றி.

(தமிழாக்கம்: ஜெயகோவிந்தராம தாஸ்)

# ஸ்ரீ ஜகந்நாதர் ஜகத்தில் தோன்றிய வரலாறு



மேலுள்ள படத்திலிருக்கும் விக்ரஹங்களை பார்க்கும் தமிழக மக்களில் பெரும்பாலோர் கேட்கும் முதல் கேள்வி, "இவர்கள் யார்?" என்பதே. நமது வலது ஓரத்தில் கருமை நிறத்தில் இருப்பவர் முழுமுதற் கடவுளான ஸ்ரீ ஜகந்நாதர் (கிருஷ்ணர்) என்றும், இடது ஓரத்தில் இருப்பவர் ஸ்ரீ பலராமர் என்றும், நடுவில் இருப்பவர் அவர்களது சகோதரியான சுபத்ரை என்றும் விளக்கம் கொடுப்பது வழக்கம். "இவர்கள் ஏன் விசித்திரமாகத் தென்படுகின்றனர், இவர்களின் வரலாறு என்ன?" என்று கேட்கப்படும் அடுத்த கேள்விகளுக்கு இதோ இங்கு பதில்கள்.

---

இந்தியாவின் ஒரிசா மாநிலத்திலுள்ள ஜகந்நாத பூரியில் பகவான் ஸ்ரீ ஜகந்நாதர் வசித்துவருகிறார், ஸ்ரீ ஜகந்நாதரின் ரதயாத்திரை (தேர் திருவிழா) ஆண்டுதோறும் கொண்டாடப்படுகிறது. ஸ்ரீ ஜகந்நாதர் தனது சகோதரர் ஸ்ரீ பலராமர் மற்றும் சகோதரி சுபத்ரையுடன் பிரம்மாண்டமான ரதங்களில் பவனி வரும் கோலாகலமான விழாவே ரதயாத்திரை திருவிழா. ஜகந்நாத பூரியில் உள்ள ஸ்ரீ ஜகந்நாதரின் ஆலயம் இந்தியாவிலுள்ள பழமையான கோயில்களில் ஒன்று. ஸ்ரீ ஜகந்நாதர் இப்பூவுலகில் தோன்றிய சுவாரஸ்யமான சம்பவம் புராணங்களில் அழகாக விளக்கப்பட்டுள்ளது.

## நீலமாதவரைக் காண விருப்பம்

ஒருமுறை பகவான் விஷ்ணுவின் பெரும் பக்தரான மன்னர் இந்திரத்யும்னரின் அரசவைக்கு விஜயம் செய்த விஷ்ணு பக்தரொருவர், நீலமாதவர் என்னும் வடிவிலிருந்த பகவானைப் பற்றிப் புகழ்ந்து பேசலானார். இதனால் மிகவும் கவரப்பட்ட மன்னர், பல்வேறு திசைகளுக்கு பிராமணர்களை அனுப்பி நீலமாதவரின் இருப்பிடத்தை அறிந்து வர கட்டளையிட்டார். அனைவரும் தோல்வியுடன் திரும்ப, சளைக்காமல் தேடி அலைந்த வித்யாபதி என்பவர், சபர

இன மக்கள் வாழ்ந்து வந்த பகுதியை அடைந்து, விஸ்வாசு என்பவரின் வீட்டில் அடைக்கலம் புகுந்தார், விஸ்வாசு தனது மகளான லலிதாவை பிராமண விருந்தாளிக்கு தேவையான அனைத்து சேவைகளையும் செய்ய நியமித்தார். அங்கேயே சிலகாலம் தங்கிய வித்யாபதி, விஸ்வாசுவின் வேண்டுகோளின்படி லலிதாவை மணம் புரிந்தார்.

விஸ்வாசுவின் வீட்டில் வித்யாபதி தங்கியிருந்தபோது, விஸ்வாசுவின் நடவடிக்கைகளில் சில விசித்திரங்களை கவனித்தார். ஒவ்வோர் இரவும் விஸ்வாசு தனியே எங்கோ சென்று மறுநாள் மதியம் சந்தனம், கற்பூரம் மற்றும் கஸ்தூரி மஞ்சள் போன்ற வாசனைப் பொருட்களின் நறுமணத்துடன் வீடு திரும்புவதை கண்டார். இதற்கான காரணத்தை தனது மனைவியிடம் வித்யாபதி விசாரிக்க, தனது தந்தை இரகசியமான இடத்தில் ஸ்ரீ நீலமாதவரை வழிபடச் செல்வதாக அவள் கூறினாள்.

## வித்யாபதி நீலமாதவரைக் காணுதல்

அதை கேட்ட வித்யாபதி அளவற்ற மகிழ்ச்சியுற்றார். ஸ்ரீ நீலமாதவரை பற்றி எவரிடமும் கூறக்கூடாது என்ற தந்தையின் கட்டளையை, லலிதா, கணவனிடம் கூறியதன் மூலம் மீறினாள். நீலமாதவரை உடனடியாக காண வித்யாபதி ஆவலுற்ற போதிலும், லலிதாவின் தொடர்ந்த வற்புறுத்தலுக்குப் பின், விஸ்வாசு, வித்யாபதியின் கண்களைக் கட்டியபடி ஸ்ரீ நீலமாதவரின் கோயிலுக்கு அவரை அழைத்துச் சென்றார். இருப்பினும், பாதையை அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக, வித்யாபதி தனது மேலங்கியில் சிறிதளவு கடுகினை இரகசியமாக எடுத்து வந்தார். கட்டப்பட்ட கண்களுடன் சென்ற வித்யாபதி, வழியெங்கும் கடுகினைத் தூவியபடி நடந்தார். ஸ்ரீ நீலமாதவரின் கோயிலை அடைந்தவுடன் வித்யாபதியின் கண்களைக் கட்டியிருந்த துணியை விஸ்வாசு அகற்ற, விக்ரஹ உருவிலிருந்த நீலமாதவரின் அதிஅற்புதமான அழகை வித்யாபதி கண்டார், பேரானந்தத்தில் மூழ்கி பிரார்த்திக்க தொடங்கினார்.

## காக்கைக்கும் முக்தி

வித்யாபதி பிரார்த்தனை செய்த பின்னர், விஸ்வாசு அவரை அங்கேயே விட்டுவிட்டு மலர்களைச் சேகரிக்கச் சென்றார். அப்போது, பிரமிக்கச் செய்யும் ஓர் அற்புத காட்சியினை வித்யாபதி கண்டார்: அருகிலிருந்த மரத்தில் உறங்கிக் கொண்டிருந்த காகம் ஒன்று, கிளையிலிருந்து தவறி ஏரியில் விழுந்தது, உடனடியாக அக்காகம் நான்கு கைகளையுடைய வைகுண்ட ரூபத்தைப் பெற்று ஆன்மீக வானத்தை நோக்கிப் புறப்பட்டது. குளத்தில் விழுந்து இறந்த காக்கை கூட முக்தியடைந்து விட்டதைக் கண்ட வித்யாபதி, மரக்கிளையில் ஏறி தானும் அந்த ஏரியில் குதிக்கத் தயாரானான்.

அப்போது வானத்திலிருந்து ஓர் அசரீரீ, "வித்யாபதி! நீலமாதவரை நீ தரிசித்த விஷயத்தை மன்னர் இந்திரத்யும்னரிடம் உடனடியாக தெரிவிப்பாயாக" என்று கூறியது. வித்யாபதி மரக்கிளையில் இருந்து இறங்கி காத்திருக்க, விஸ்வாசு காட்டு மலர்களையும் வேர்களையும் எடுத்துக்கொண்டுவிரைவில்திரும்பினார். பின்னர் நீலமாதவருக்கான தனது தினசரி வழிபாட்டைத் தொடங்கினார். அவ்வாறு வழிபட்டுக் கொண்டிருக்கையில், "வெகுகாலமாக நீ எமக்கு அர்ப்பணித்த காட்டு மலர்களையும் வேர்களையும் ஏற்றுக் கொண்டேன். தற்போது எனது பக்தனான மன்னன் இந்திரத்யும்னனின் இராஜபோக சேவையை ஏற்க விரும்புகிறேன்" என்று நீலமாதவர் கூறினார்.

## இந்திரத்யும்னரின் ஏமாற்றம்

ஸ்ரீ நீலமாதவரின் சேவை தனக்குக் கிடைக்காமல் போய்விடும் என்று விஸ்வாசு வருந்தினார். இருப்பினும், வித்யாபதியை மன்னரிடம் செல்ல அனுமதித்தார். உடனடியாக மன்னர் இந்திரத்யும்னரிடம் சென்ற வித்யாபதி, நீலமாதவரின் இருப்பிடத்தை கண்டுபிடித்ததைப் பற்றித் தெரிவித்தார்.

பெரும் பரவசமடைந்த அரசன், ஸ்ரீ நீலமாதவரை தரிசித்து அங்கேயே வாழ்நாள் முழுவதும் தங்கிவிடலாம் என்ற எண்ணத்துடன் பல்வேறு மக்களைக் கூட்டிக் கொண்டு காட்டிற்கு விரைந்தார். வித்யாபதி வழிநெடுக





தூவிய சில கடுகு விதைகளிலிருந்து சிறு செடிகள் வளர்ந்திருந்தன. அவற்றை பின் தொடர்ந்த அனைவரும் ஸ்ரீ நீலமாதவரின் இருப்பிடத்தை அடைந்தனர். ஆனால், நீலமாதவரை அங்குக் காணவில்லை, மன்னருக்கு ஏமாற்றமே மிச்சமாக அமைந்தது. அப்பகுதி முழுவதும் மணலினால் மூடப்பட்டுவிட்டது.

மன்னர் வருத்தமடைய, "வருத்தப் படாதே! நீலமலையின் உச்சியில் நீ எனக்காக ஒரு கோயிலைக் கட்டுவாயாக. அங்கு பரம்பொருளாகிய நான் தாரு-பிரம்மனாக (மரத்தின் வடிவில்) தோன்றுவேன். இனி என்னை நீலமாதவராகக் காண இயலாது," என்று ஓர் அசிரிரீயின் மூலம் பகவான் தனது விருப்பத்தை வெளிப்படுத்தினார்.

## கோவில் கட்டுமானம்

அரசர் இந்திரத்யும்னர் கோவில் கட்டுவதில் தீவிரமானார், பௌமலை என்ற இடத்திலிருந்து கற்களை கொண்டு வருவதற்காக, அங்கிருந்து நீல கந்தாரமலை வரை சாலை அமைத்தான். ஸ்ரீ க்ஷேத்திரம் அல்லது பூரி என்று அழைக்கப்பட்ட அந்த புனித ஸ்தலம் ஒரு சங்கின் வடிவில் அமைந்திருந்தது. அதன் மையப் பகுதியில், இராமகிருஷ்ணபுரம் என்ற நகரத்தை அமைத்த மன்னர், அங்கு ஜகந்நாதருக்கு பிரம்மாண்டமான கோயிலைக் கட்டினார். கோயிலின் உச்சியில் கலசமும் அதற்கு மேல் ஒரு சக்கரமும் அமையுமாறு கட்டினார். கோயிலை தங்க ஆபரணங்களால் அலங்கரித்தார். பிரம்மதேவரே நேரில் வந்து மஹா கும்பாபிஷேகம் செய்ய வேண்டும் என்று விரும்பிய அரசர் இந்திரத்யும்னர், பிரம்ம லோகம் வரை சென்று அவரை அழைத்து வந்தார்.

## பிரம்மதேவரின் அருள்

பின்னர், இந்திரத்யும்னர் பிரம்ம தேவரிடம் உயர்ந்த முக்தியை நல்கும் ஸ்ரீ க்ஷேத்திரம் என்ற அப்பகுதியையும் கோயிலையும் புனிதப்படுத்த வேண்டினார். பிரம்மதேவரோ, பகவானின் அந்தரங்க சக்தியால் தோன்றியுள்ள இந்த ஸ்ரீ க்ஷேத்திரத்தில் பகவானே எழுந்தருளியிருக்கிறார் என்பதால், அவரை இங்கு ஸ்தாபிப்பது தனது சக்திக்கு உட்பட்டதல்ல என்று கூறினார். அக்கோயிலின் உச்சியில் ஒரு கொடியினை அமைத்த பிரம்மதேவர், அதனை ஒருவர் தூரத்திலிருந்து தரிசித்து தலை வணங்கினாலும் எளிமையாக முக்தி அடைவர் என்று ஆசிர்வதித்தார்.

பிரம்மதேவர் யாகம் ஒன்றினைச் செய்து ஸ்ரீ நரசிம்மதேவரின் விக்ரஹத்தை அங்கு முதலில் பிரதிஷ்டை செய்தார். தற்போது கோயில் இருக்கும் இடம் அந்த யாகம் நடந்த இடமே என்று கூறப்படுகிறது. கோயில் வளாகத்தில் இருக்கும் முக்தி மண்டபத்தின் மேற்கு புறத்தில் அமைந்திருக்கும் ஸ்ரீ நரசிம்ம மூர்த்தி பிரம்மதேவரால் பிரதிஷ்டை செய்யப்பட்ட அதே நரசிம்ம மூர்த்தியாகும்.

## ஜகந்நாதரின் வரவு

நீலமாதவரின் வரவிற்காகக் காத்திருந்த மன்னர் இந்திரத்யும்னர், அவரைக் காண இயலாததால், தனது வாழ்வே பயனற்றது என்று எண்ணி தர்ப்பைப் புல்லைப் பரப்பி, அதன்மீது உண்ணாவிரதமிருந்து உயிர் துறக்க

தீர்மானித்தார். அச்சமயம் அவரது கனவில் தோன்றிய பகவான், "அன்பான அரசனே! கவலைப்படாதே. பாங்கிமுஹான் என்ற இடத்தில் மரத்துண்டின் வடிவில் நான் கடலில் மிதந்தவாறு வருவேன்," என்று கூறினார்.

மகிழ்ச்சியுற்ற மன்னர், தனது படைவீரர்களுடன் அவ்விடத்திற்குச் செல்ல, பெரிய மரத்துண்டு ஒன்று சங்கு, சக்கரம், கதை, மற்றும் தாமரைச் சின்னங்களுடன் கரையை வந்தடைந்தது. பலசாலி மனிதர்களாலும் யானைகளாலும்கூட அந்த தாரு-பிரம்மனை (மரத்தின் வடிவிலிருக்கும் முழுமுதற் கடவுளை) சற்றும் அசைக்க முடியவில்லை. மீண்டும் வருத்தமடைந்த மன்னரின் கனவில், அன்றிரவு ஸ்ரீ ஜகந்நாதர் மீண்டும் தோன்றி, "நீலமாதவனாக என்னை சேவித்த விஸ்வாசுவை அழைத்து வா, ஒரு தங்க ரதத்தை தாரு-பிரம்மனின் முன்பு நிற்க வை," என்று கூறினார்.

அக்கட்டளையின்படி, தாரு பிரம்மனின் ஒரு புறம் விஸ்வாசுவையும் மறுபுறம் பிராமணர் வித்யாபதியையும் மன்னர் நிற்க வைத்தார், தங்க ரதத்தை தாரு பிரம்மனின் முன்பு நிறுத்தினார். பின்னர், பரம புருஷ பகவானது புனித நாமங்களை அனைவரும் கீர்த்தனம் செய்யத் தொடங்கினர். மன்னர் தாரு பிரம்மனிடம் ரதத்தில் ஏறுமாறு வேண்ட, அவர் மிகவும் எளிமையாக ரதத்தில் அமர்த்தப்பட்டு வேண்டிய இடத்திற்குக் கொண்டு வரப்பட்டார்.


## விஸ்வகர்மாவின் உதவி

தாரு பிரம்மனிலிருந்து இறைவனின் வடிவத்தைச்செதுக்கபல்வேறுகைதேர்ந்த சிற்பிகளை மன்னர் இந்திரத்யும்னன் நியமித்தார். ஆனால் அவர்கள் செதுக்க ஆரம்பிக்கும்போது, அவர்களது உளிகள் உடைந்து துகள்களானதே மிச்சம், தாரு பிரம்மனை அவர்களால் ஒன்றும் செய்ய இயலவில்லை. இறுதியில், பகவான் விஷ்ணுவின் விருப்பத்தின்படி, தேவர்களின் சிற்பியான விஸ்வகர்மா் வயதான சிற்பியின் உருவில் அரசவைக்கு வந்தார். இருபத்தோரு நாள்கள் கதவை மூடிவிட்டு தனிமையில் தன்னை வேலை செய்ய அனுமதித்தால், விக்ரஹங்களை தான் செதுக்குவதாக அவர் வாக்களித்தார். உடனடியாக ஏற்பாடுகள் செய்யப்பட்டன, வயதான சிற்பியின் வழிகாட்டுதலின்படி மற்ற சிற்பிகள் மூன்று தேர்களை செய்வதில் ஈடுபட்டனர். இருபத்தோரு நாள்களுக்கு முன்னர் எவரும் கதவைத் திறக்கக் கூடாது என்று அரசரிடம் வாக்குறுதியை பெற்ற வயதான சிற்பி, தாரு பிரம்மனை கோயிலுக்குள் எடுத்துச் சென்று கதவை மூடிக் கொண்டார். பதினான்கு நாள்கள் கழிந்த பின்னர், செதுக்கும் ஓசை எதுவும் கேட்காததால், அரசர் மிகவும் கவலையுற்றார். வயதான சிற்பிக்கு எதுவும் ஆகிவிடக் கூடாது என்னும் அரசியின் ஆலோசனையின் பேரில், கோயிலின் கதவை மன்னர் தனது கைகளாலேயே மிகுந்த விசையுடன் திறந்தார்.

## ஜகந்நாதரின் அருள்

உள்ளே சிற்பியைக் காணவில்லை, ஜகந்நாதர், பலதேவர், மற்றும் சுபத்ரையின் விக்ரஹங்கள் முற்றுப் பெறாத நிலையில் இருந்தன. கொடுத்த வாக்கை மீறி ஏழு நாள்கள் முன்னதாகவே கதவை திறந்தமையால், விக்ரஹங்கள் முழுமையாக இல்லை என்பதை உணர்ந்த அரசர், தன்னை பெரும் குற்றவாளியாக எண்ணி உயிரை விட்டுவிட தீர்மானித்தார். தர்ப்பை புல்லை பரப்பி, உண்ணாவிரதத்தை தொடங்கிய மன்னரின் கனவில், ஜகந்நாதர் தோன்றி, "வருத்தப்படாதே, இவையனைத்தும் எனது ஏற்பாடுகளே. நான் தோன்றும்போது எனது விருப்பத் தின்படியே தோன்றுகிறேன். எனக்கு புற உலகத்தின் கைகளோ, கால்களோ இல்லை, ஆயினும் எனது தெய்வீகப் புலன்களால் எனது பக்தர்களின் சேவை களை ஏற்பேன்," என்று கூறினார்.

ஜகந்நாதரின் வார்த்தைகளால் திருப்தியுற்ற அரசர் அவரிடம் பிரார்த்தனை செய்தார்: "எம்பெருமானே! உமது தோற்றத்திற்கு காரணமாகயிருந்த சிற்பியின் வம்சாவழியினர் இந்த மூன்று ரதங்களை வடிவமைக்கும் பணியில் காலம் காலமாக தொடர்ந்து இருக்க வேண்டும்." அதற்கு அனுமதி வழங்கிய ஸ்ரீ ஜகந்நாதர், அரசரிடம், "நீலமாதவராக எனக்கு சேவை செய்த விஸ்வாசுவின் சந்ததியினரே எனக்கு எப்போதும் சேவை செய்ய வேண்டும். அவர்கள் எனது தைத்தியர்கள் என்று அழைக்கப்படுவர்; வித்யாபதியின் வழிவந்தோர் எனக்கு அர்ச்சா வழிபாடு செய்ய வேண்டும்" என்று கூறினார். பிறகு, அரசர்



இந்திரத்யும்னர் ஜகந்நாதரிடம், "இக்கோவிலின் கதவுகள் ஒரு நாளைக்கு மூன்று மணி நேரமே மூடியிருக்க வேண்டும், அப்போது உலகத்தோர் அனைவரும் வந்து உம்மை தரிசிக்க முடியும். நாள் முழுவதும் தாங்கள் உணவருந்த வேண்டும், அதன் மூலம் உமது தாமரை விரல்கள் காய்ந்திராமல் இருக்க வேண்டும். இதுவே எனது பிரார்த்தனை," என்று வேண்டினார்.

அந்த ஆசியையும் வழங்கிய ஜகந்நாதர், "உமக்காக நீ என்ன வரம் வேண்டுகிறாய்?" என்று கேட்டார். "தனிப்பட்ட முறையில் யாரும் உம்முடைய கோயிலை உரிமை கொண்டாடக் கூடாது, இந்த ஒரு வரத்தை எனக்கு அளியுங்கள்" என்று வேண்டினார். ஜகந்நாதரும், அவ்வாறே ஆகட்டும் என்று ஆசிர்வதித்தார்.

ஜகந்நாதரின் இத்தகு விநோதமான வடிவத்தினை ஏதோ அறைகுறையான உருவம் என்று எண்ணிவிடக் கூடாது. ஒருமுறை, கிருஷ்ணரின் ராணியர் அனைவரும் அவரது விருந்தாவன லீலைகளை கேட்க ஆவல் கொண்டு அன்னை ரோகிணியை சூழ்ந்து கொண்டனர். அந்த அற்புத லீலைகளை அன்னையும் வர்ணிக்க, கிருஷ்ண பலராமர் வந்தால் சைகை கொடுக்க வேண்டும் என்ற கட்டளையுடன் காவலுக்கு வைக்கப்பட்ட சுபத்ரையும் அந்த லீலைகளில் மூழ்கிவிட்டார். கண்களை விரித்து லீலைகளைக் கேட்டுக் கொண்டிருந்த சுபத்ரையின் அருகில் வந்த கிருஷ்ண பலராமரும், தங்களது சொந்த லீலைகளை கேட்டு ஆனந்தத்தில் கண்களை விரித்தனர், கூட்டத்தினுள் புகுந்தபடி கேட்டுக் கொண்டிருந்ததால், கைகளும் ஒடுங்கி இருந்தன. இந்த அற்புத தோற்றமே ஜகந்நாதரின் தற்போதைய தோற்றம்.

இவ்வாறாக கருணையின் கடலாகிய ஸ்ரீ ஜகந்நாதர், தனது சகோதரர் பலராமர் மற்றும் சகோதரி சுபத்ரையுடன் இவ்வுலகின் அனைத்து உயிர்வாழிகளின் நன்மைக்காகத் தோன்றினார்.

### வாசகரின் கருத்துகள்

ஸ்ரீ கிருஷ்ண தரிசனத்தைப் படிக்கும் வாசகர்கள், ஏதேனும் கருத்து சொல்ல விரும்பினாலோ, கேள்விகள் கேட்க விரும்பினாலோ, முதல் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள எமது பதிப்பக முகவரிக்கு கடிதம் அல்லது மின்னஞ்சல் அனுப்பும்படி வேண்டப்படுகிறார்கள். பின்வரும் இதழ்களில் அவை பிரசுரிக்கப்படும்.


## இஸ்கான் சந்நியாசிக்கு ஹங்கேரி நாட்டின் உயரிய விருது





அக்டோபர் 20, 2009: ஹங்கேரி நாட்டின் மிகவுயர்ந்த விருதுகளில் ஒன்றான "கோல்டன் கிராஸ், இஸ்கான் மூத்த சந்நியாசிகளில் ஒருவரான தவத்திரு சிவராம ஸ்வாமி அவர்களுக்கு வழங்கப்பட்டது. ஹங்கேரி நாட்டின் குடியரசுத் தலைவரின் சார்பில், நாட்டின் கல்வி மற்றும் ஆராய்ச்சித் துறையின் அதிகாரியான Dr. கரோலி மேன்ஹர்ஸ் இவ்விருதினை சிவராம ஸ்வாமியின் மனித நேயத் தொண்டுகளுக்காக வழங்கினார். மனித உரிமை, சிறுபான்மையினோர் நலம் மற்றும் மத நல்லிணக்கத்திற்கான பாராளுமன்ற குழுவின் தலைவரான ஜோல்டன் பலாக், இந்திய தூதர் ரஞ்ஜித் ராய் உட்பட பல்வேறு உயர்நிலை அதிகாரிகள் நிகழ்ச்சியில் பங்கு கொண்டு சிறப்பித்தனர்.


ஹங்கேரி நாட்டில் பிறந்து கனடாவில் வளர்ந்த தவத்திரு சிவராம ஸ்வாமி, 1973ல் ஹரே கிருஷ்ண இயக்கத்தில் இணைந்து, இஸ்கானின் ஸ்தாபக ஆச்சாரியரான தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதரிடம் தீட்சை பெற்று அவரது சீடரானார். 1989ல் ஹங்கேரி நாட்டில் கிருஷ்ண பக்தியை நிறுவி, வெகுவிரைவிலேயே ஹங்கேரி மொழியில் ஸ்ரீல பிரபுபாதரின் பல்வேறு புத்தகங்களை வெளியிட்டார். 1994ல் இவரால் தொடங்கப்பட்ட இந்திய கலாசார நிலையமும் இயற்கை விவசாயத்திற்காக தொடங்கப்பட்ட பண்ணைகளும் மக்களை வெகுவாக கவர்ந்தன. அரசாங்க அனுமதியுடன் தொடங்கப்பட்ட பக்திவேதாந்த கல்லூரியில் வருடந்தோறும் நூற்றுக்கணக்கான மாணவர்கள் ஆன்மீக கல்வி பயின்று வருகின்றனர். சிவராம ஸ்வாமி ஒரு நல்ல எழுத்தாளரும் கூட, பல்வேறு புத்தகங்களையும் எழுதியுள்ளார். கடந்த 20 வருடங்களாக இவர் ஆற்றிய திருப்பணியைப் போற்றிய ஹங்கேரி அரசு, இந்த மாபெரும் விருதினை இவருக்கு வழங்கியுள்ளது.



குருடர்களும் யானையும்
ஸ்ரீல பக்திசித்தாந்த சரஸ்வதி
தாகூரால் அருளப்பட்ட உபதேச கதை
யானை என்னும் பெயர் கொண்ட ஒரு மிருகத்தைப் பற்றி பெரியவர்களிடமிருந்து கேட்டறிந்த சில குருடர்கள், அந்த யானையைத் தொட்டுப் பார்த்து, அஃது எப்படிப்பட்டது என்பதை முடிவு செய்ய பேராவல் கொண்டனர்.
அற்புதம்! யானை எப்படிப்பட்டது என்பதை அறிந்து கொள்ளுதல் அவசியம். யானை இருக்கும் இடத்திற்குச் செல்லலாம். வாருங்கள்.
யானைப் பாகனிடமிருந்து அனுமதி வாங்கிய குருடர்கள், யானையைத் தொட்டுப் பார்த்தனர்.
யானையின் துதிக்கையை தொட்டுப் பார்த்த ஒரு குருடன், யானையானது ஒரு பெரிய பாம்பினைப் போன்றது என்று முடிவு செய்தான்.
யானையின் காதினைத் தொட்டுப் பார்த்த மற்றொரு குருடன் அதனை ஒரு பெரிய விசிறியாக நினைத்தான்.




## கருத்து

தங்களது சுய அறிவு, கல்வி, அல்லது யூகத்தினால் முழுமுதற் கடவுளின் உருவத்தைப் பற்றிய சொந்த முடிவிற்கு வரும் நபர்களை இக்கதை சுட்டிக் காட்டுகிறது. அவர்களின் முடிவு, பரம்பொருளைப் பற்றிய பக்குவமற்ற கற்பனைக் கருத்தாகத்தான் இருக்கும். முழுமுதற் கடவுளை நேரடி அனுபவத்தினாலும் கற்பனையினாலும் உணருவதற்கான இத்தகு முயற்சிகள், பல்வேறு நாத்திகக் கொள்கைகளுக்கும் தவறான கொள்கைகளுக்கும் காரணமாக அமைகின்றன.

ஆனால் ஒரு தூய பக்தரிடமிருந்து தெய்வீக அறிவைப் பெறுபவன், இறைவனைக் காணும் தகுதியைப் பெற முடியும். அதன் மூலம், பகவானின் உண்மை நிலையையும் ரூபத்தையும் முறையாகப் புரிந்துகொள்ள முடியும். பக்தரல்லாதவர்கள் கூட அறிவின் மயக்கத்தில் இருப்பதால், முழுமுதற் கடவுளைப் பற்றிய பக்குவமற்ற கற்பனைக் கருத்துகளை மட்டுமே அவர்களால் வழங்க இயலும். கடவுள் உருவமற்றவர் என்ற கருத்தும் அவரது உருவத்தைப் பற்றிய கற்பனைக் கருத்துகளும் பக்குவமற்றவை என்பதை உணர்தல் மிகவும் அவசியம்.

வரைபட உதவி: www.iskcondesiretree.com

# ஆன்மீக ஆனந்தத்தின் திருவிழா

**நமது இதயத்தை தூய்மை செய்து தன்னுணர்வில் முன்னேற இந்த தேர் திருவிழா ஓர் அரிய வாய்ப்பாகும்.**

*இந்த ஆன்மீக உரை அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் ஸ்தாபக ஆச்சாரியரான தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதரால் இலண்டன் நகரில் 1972 கொடுக்கப்பட்டது.*

**ஸ்ரீமதியரே ஸ்ரீமான்களே,**

இந்த மாபெரும் இயக்கமான ஹரே கிருஷ்ண சங்கீர்த்தன இயக்கத்தில் பங்கேற்க வருகை தந்துள்ள உங்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள் கிறேன். இந்த இயக்கமானது சுமார் ஐநூறு ஆண்டுகட்கு முன்பு பகவான் ஸ்ரீ சைதன்ய மஹாபிரபுவால், இந்தியாவில் உள்ள மேற்கு வங்காள மாநிலத்தில் தொடங்கப்பட்டது. இந்த ஹரே கிருஷ்ண இயக்கம் உலகம் முழுவதும் பரவ வேண்டும் என்பதே அவரது நோக்கம். உலகிலுள்ள எல்லா நகரங்களிலும் கிராமங்களிலும் இது பரவுமென்று அவர் அன்றே முன்னுரைத்தார், தற்போது அஃது இன்று அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தினரால் நிறைவேற்றப்பட்டு வருகிறது.

இந்த இயக்கத்தினால் நன்மை யடைய உங்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். இதயத்தை சுத்தம் செய்வதே இந்த இயக்கத்தின் நோக்கம். நமது தவறான அடையாளங்களினால் நாம் பல்வேறு பிரச்சனைகளை உருவாக்கியுள்ளோம். அத்தகு தவறான எண்ணங்களிலிருந்து இதயத்தை தூய்மைப்படுத்துவதே இந்த இயக்கம். தவறான அடையாளம் என்றால் என்ன? இந்த பௌதிக உடலோடு நம்மை நாம் அடையாளம் காண்பதே, தவறான அடையாளம் எனப்படுகிறது. நாம் நம்மை இந்த உடலாக புரிந்துகொள்ளுதல் தவறாகும், உயிர்வாழிகளான நாமனைவரும் பௌதிக உடலில் அடைபட்டிருக்கும் ஆன்மீக ஆத்மாக்கள். மேலும், நாம் ஓர் உடலிலிருந்து மற்றொன்றிற்கு மாறிக் கொண்டே உள்ளோம். 84 இலட்சம் உயிரின வகைகள் உள்ளன. அதில் தன்னுணர்வு பெறுவதற்கான பெரும் வாய்ப்பு இந்த மனிதப் பிறவியே.

"நான் இந்த உடலல்ல, நான் ஓர் ஆன்மீக ஆத்மா, பகவானின் சிறு அம்சம்" என்பதை அறிந்துகொள்வதே தன்னுணர்வு ஆகும். உயிர்வாழிகள் கடவுளது அம்சம் என்பதை பகவத் கீதையின் பதினைந்தாம் அத்தியாயத்தில் நீங்கள் படித்திருக்கலாம். பரம புருஷ பகவான், ஆனந்தமயமான தன்மையை உடையவர் என்று வேதாந்த சூத்திரம் விவரிக்கின்றது. நாமனைவரும் அந்த பகவானின் அம்சமே என்பதால், நமது வாழ்வின் குறிக்கோள் ஆனந்தமாக இருப்பதே.

அந்த ஆனந்தந்தை தற்போது நாம் இந்த பௌதிக உலகில் தேடிக் கொண்டுள்ளோம்; ஆனால் அதை இங்கு அடைவது சாத்தியமன்று. ஒரு மீனை நீரிலிருந்து எடுத்துத் தரையில் வைத்தால், அனைத்து வசதிகளுக்கு மத்தியிலும், அதனால் மகிழ்ச்சியாக இருக்க முடியாது. அதைப் போலவே ஆன்மீக ஆத்மாக்களான நாம் எவ்வாறோ இந்த பௌதிக உலகின் தொடர்பினுள் வந்து விட்டோம். இந்த பௌதிக உலகம் நமது ஆன்மீக உணர்விற்கு முற்றிலும் முரண்பட்டது என்பதால், நாம் இங்கு ஆனந்தமாக இருக்க முடியாது. பௌதிகப் புலன்களுக்கு அப்பாற்பட்ட ஆன்மீக ஆனந்தமே நமது தேவையாகும்.

நமது பௌதிகப் புலன்களை தூய்மை செய்வதற்காகவே இந்த கிருஷ்ண பக்தி இயக்கம் இருக்கின்றது. நமது புலன்கள் தூய்மையடைந்த உடனேயே ஆன்மீகப் புலன்களின் ஆனந்தத்தை நம்மால் அனுபவிக்க முடியும். தற்போது நமது புலன்கள் ஜடத்தினால் கவரப் பட்டுள்ளதால், அவை முறையாக உபயோகப்படுத்தபடவில்லை. நாம் தற்போது அனுபவிக்கும் ஆனந்தம், உண்மையான ஆன்மீக ஆனந்தத்தின் பிரதிபிம்பமே. அந்த ஆன்மீக ஆனந் தத்தை அனுபவிக்க நமது புலன்களை கிருஷ்ண உணர்வின் மூலம் தூய்மைப் படுத்த வேண்டும். உடல் சார்ந்த தவறான அடையாளங்களிலிருந்து நாம் விடுபடும்போது நாம் தூய்மை யடைவோம். இந்தியாவில் பிறந்த சிலர் தன்னை இந்தியன் என்றும், இங்கிலாந்தில் பிறந்தவர் தன்னை ஆங்கிலேயன் என்றும், ஜப்பானில் பிற்ந்தவர்கள் தங்களை ஜப்பானியர்கள் என்றும் அடையாளம் காண்கின்றனர். உண்மையில், நாம் இந்தியரோ, ஆங்கிலேயரோ, ஜப்பானியரோ அல்ல.

**வலது:** இலண்டன், 1972. ரதயாத்திரையில் பங்கேற்கக் கூடியிருந்த ஆயிரக்கணக்கான மக்களிடம் கிருஷ்ண பக்தி குறித்து ஸ்ரீல பிரபுபாதர் பேசுதல். அவருக்கு மேலே பகவான் ஸ்ரீ ஜகந்நாதர், பலதேவர் மற்றும் சுபத்ரையுடன் பிரம்மாண்டமான ரதத்தில் அற்புதமாக வீற்றுள்ளார்.




நாம் பகவானின் அம்சமான ஆன்மீக ஆத்மா. அதை உணர்வதே தன்னுணர்வு எனப்படும். இந்த தன்னுணர்வினை நாம் எட்டும்வரை, நமது எல்லா செயல்களும் தோல்வியிலேயே முடியும்.

தற்போதைய நாகரிகத்தில், கல்வி, பொருளாதாரம், போன்றவற்றில் மக்கள் எவ்வளவுதான் முன்னேறியிருந்தாலும், அவர்கள் அதே பிரச்சனை நிறைந்த சூழலிலேயே என்றென்றும் சிக்கித் தவிப்பதை நாம் காணலாம். ஏன்? ஏனெனில், தாங்கள் யார் என்பதை மக்கள் அறியவில்லை. அதுவே தற்போதைய நாகரிகத்தின் குறைபாடு. உண்மையான அமைதியையும் ஆனந்தத்தையும் பெற விரும்பினால், "நாம் அனைவரும் ஆன்மீக ஆத்மாக்கள்" என்பதை நாம் முதலில் உணர்ந்திருக்க வேண்டும்.

தன்னுணர்வு பற்றிய அனைத்து விஷயங்களும் வேத இலக்கியங்களில் விளக்கப்பட்டுள்ளன. மேலும், ஐயாயிரம் வருடங்களுக்கு முன்பு பகவான் ஸ்ரீ கிருஷ்ணர், தாமே இந்த உன்னத தத்துவத்தை பகவத் கீதையில் பேசியுள்ளார். நாங்கள் இந்த இலக்கியங்கள் அனைத்தையும் ஆங்கிலத்திலும் பல்வேறு இதர மொழிகளிலும் மொழிபெயர்த்துள்ளோம். இந்த விஞ்ஞானபூர்வமான ஆன்மீக இயக்கத்தை தத்துவ விவாதங்களால் புரிந்துகொள்ள விரும்புவோருக்காக, எம்மிடம் ஏராளமான புத்தகங்கள் உள்ளன.

இல்லையெனில், நீங்கள் எளிமையாக ஹரே கிருஷ்ண மஹாமந்திரத்தை ஜெபிக்கலாம். இம்மந்திரம் பதினாறே வார்த்தைகளைக் கொண்டது: ஹரே கிருஷ்ண, ஹரே கிருஷ்ண, கிருஷ்ண கிருஷ்ண, ஹரே ஹரே/ ஹரே ராம, ஹரே ராம, ராம ராம, ஹரே ஹரே. இதற்கு எவ்வித செலவும் நீங்கள் செய்யத் தேவையில்லை, கட்டணமும் கிடையாது. ஹரே கிருஷ்ண மந்திரத்தை நீங்கள் ஜபித்தால் உங்களுக்கு எவ்வித இழப்பும் இல்லை. நாங்கள் பணம் கேட்பதில்லை, இந்த மஹாமந்திரத்தை கட்டணம் ஏதுமின்றி விநியோகிக்கின்றோம். யார்



வேண்டுமானாலும் இம்மந்திரத்தை ஜெபிக்கலாம். இதில் எந்தவொரு சிரமமும் இல்லை. இந்த மந்திரத்தை அடிப்படையாகக் கொண்டு, நாங்கள் இந்த இயக்கத்தை அகிலமெங்கும் பரவச் செய்கிறோம். உம்முடைய நாட்டில் மட்டுமல்லாது, அமெரிக்கா, கனடா, ஜப்பான், ஆஸ்திரேலியா, நியுசிலாந்து, ஆப்பிரிக்கா என்று எல்லாவிடங்களிலும் இந்த சங்கீர்த்தன இயக்கம் பிரபலமாகியுள்ளது. உலகெங்கிலும் எங்களுக்கு நூற்றிற்கும் மேற்பட்ட கிளைகள் உள்ளன. எமது ஒரே வேண்டுகோள் என்னவெனில், நீங்கள் எந்நிலையில் இருந்தாலும், உமக்கு நேரம் கிட்டும்போதெல்லாம், இந்த பதினாறு வார்த்தைகளை கொண்ட திருநாமத்தை ஜெபம் செய்ய முயற்சி செய்யுங்கள். ஹரே கிருஷ்ண மந்திரத்தை தெருவில் நடக்கும்போதும், பேருந்தில் பயணிக்கும்போதும், தனியே அமர்ந்திருக்கும்போதும், நீங்கள் ஜபம் செய்யலாம். அதில் எந்தவித இழப்பும் இல்லை. ஆயினும் நீங்கள் அடையும் இலாபமோ மிகவுயர்ந்தது. ஆகவே எமது ஒரே வேண்டுகோள் என்னவெனில், இந்த மஹாமந்திரமான, ஹரே கிருஷ்ண, ஹரே கிருஷ்ண, கிருஷ்ண கிருஷ்ண, ஹரே ஹரே/ஹரே ராம, ஹரே ராம, ராம ராம, ஹரே ஹரே என்பதை ஜெபிக்கத் தொடங்குங்கள். தற்போது நடக்கும் ரதயாத்திரை போன்ற திருவிழாக்களின் மூலம் அவ்வப்போது இதை உங்களுக்கு நாங்கள் நினைவுபடுத்துகிறோம்.





**இடது:** ஜகந்நாதர் ரதத்தின் முன்பு ஆனந்த நடனமாடும் பகவான் ஸ்ரீ சைதன்யர்.
**மேலே:** மகிழ்ச்சியுடன் ஆடிப் பாடி பிரசாதம் ஏற்கும் கிருஷ்ண பக்தர்கள்

இந்த ரதயாத்திரை திருவிழா ஏறக் குறைய ஐயாயிரம் ஆண்டுகாலமாக நடந்து வரும் தொன்மையான திருவிழா வாகும். பகவான் ஸ்ரீ கிருஷ்ணர், தனது மூத்த சகோதரர் பலராமர், மற்றும் தங்கை சுபத்ரையும் ஒருமுறை துவாரகையிலிருந்து குருக்ஷேத்திரத்திற்கு தேரில் பவனி வந்தனர். இதனை நினைவு கூறும் வண்ணம், ஒவ்வோர் ஆண்டும் இந்தியாவிலுள்ள ஜகந்நாத பூரியில் ரதயாத்திரை திருவிழா கோலாகலமாக கொண்டாடப்பட்டு வருகிறது. ஹரே கிருஷ்ண இயக்கத்தை மேலை நாடு களில் அறிமுகப்படுத்திய நாங்கள், இந்த ரதயாத்திரை விழாவையும் அறிமுகப் படுத்துகிறோம்; ஏனெனில், இந்த இயக்கத்தை தொடங்கி வைத்தவரான பகவான் ஸ்ரீ சைதன்யர் இந்த விழாவில் உற்சாகத்துடன் பங்கேற்றார். நாங்களும் அவரது அடிச்சுவடுகளைப் பின்பற்றுகிறோம். தற்சமயம் இலண்டனில் நடக்கும் இந்த ரதயாத்திரை, இதே சமயத்தில் சான்பிரான்சிஸ்கோ, மெல்போர்ன், டோக்யோ, கல்கத்தா மற்றும் பல இடங்களில் நடைபெற்று வருகிறது. ரதே சா-கமனம் த்ருஷ்ட்வா புனர் ஜன்ம ந வித்யதே: "ரதத்தில் வரும் பகவானை தரிசிப்பவர்களுக்கு மறுபிறவி கிடையாது." சிரமம் கருதாது இந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்ள வந்திருக்கும் உங்களனைவரையும் கண்டு நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். இப்போது பக்தர்களுடன் கூடி ஹரே கிருஷ்ண மந்திரத்தை ஜபித்து, பிரசாதத்தினை ஏற்றுக் கொள்ளுங்கள்.

எமது ஹரே கிருஷ்ண இயக்கம் மூன்று அடிப்படை விஷயங்களை சார்ந்துள்ளது: நாம சங்கீர்த்தனம், ஆடி மகிழ்தல், மற்றும் பிரசாதம் ஏற்றல். இவற்றில் சற்றும் சிரமம் கிடையாது. பாடி ஆடுவதையும் பிரசாதம் ஏற்பதையும் அனைவரும் அனுபவிக்க முடியும். நீங்கள் விரும்பினால் கிருஷ்ண உணர்வின் தத்துவங்களை சிறிது கேட்கலாம். தத்துவங்கள் உங்களுக்கு புரியாவிட்டாலும், புத்தகங்களை நீங்கள் படிக்காவிட்டாலும் பரவாயில்லை; ஹரே கிருஷ்ண ஜெபம், பிரசாதம் ஏற்றல், நடனமாடுதல் ஆகிய மூன்றிலும் பங்கேற் பதன் மூலம் நீங்கள் படிப்படியாக ஆன்மீகத்தில் முன்னேறுவீர். மேலும் இவற்றை நீங்கள் தொடர்ந்து கடைப் பிடித்தால், இப்பிறவியிலேயே நீங்கள் கிருஷ்ணரை புரிந்துகொள்ளலாம். அதன் மூலம், நீங்கள் உங்களது மரணத்திற்குப் பின் கிருஷ்ணரின் லோகத்தை அடைவீர். இது பகவத் கீதையில் (4.9) உறுதியளிக்கப்பட்டுள்ளது.

இந்த ரதயாத்திரை கிருஷ்ணரின் செயல்களில் ஒன்று. ஆகையால் ரதயாத்திரை விழாவில் பங்கேற்பதன் மூலம் கிருஷ்ணரிடம் நேரடியாக தொடர்பு கொள்கிறோம். இவ்வாறு கிருஷ்ணரின் நாமம், ரூபம், செயல்கள், மற்றும் லீலைகளில் தொடர்பு கொள்வதன் மூலம், நாம் படிப்படியாக இந்த பௌதிக இருப்பை கடந்து, உன்னத தளத்திற்குச் செல்வோம்.

என்றாவது ஒருநாள் நாம் இந்த உடலை கைவிட வேண்டும். கிருஷ்ண உணர்வில் முன்னேறிய பிறகு இவ்வுடலை கைவிட்டால், நமக்கு மறுபிறவி கிடையாது. "என்னிடம் நீங்கள் வருவீர்கள்" என்று கிருஷ்ணர் கூறுகிறார். இந்த பௌதிக வானிற்கு அப்பால் மற்றொரு வானம் உள்ளது. தோன்றி மறையும் ஜட இயற்கையிலிருந்து வேறுபட்ட அந்த நித்திய உலகமோ ஆன்மீகமயமானது. இங்குள்ள அனைத்தும் அழிந்த பிறகும், அந்த உலகம் எப்போதும் இருக்கும்.

ஆகவே, நமது ஒரே இலட்சியம், இந்த தற்காலிகமான உலகிலிருந்து நித்தியமான உலகிற்கு மாறுவதாகும். மக்களை இருள் நிறைந்த உலகிலிருந்து வெளிச்சம் நிறைந்த உலகான கோலோக விருந்தாவனத்திற்கு மாற்றுவதற்கு நாங்கள் முயற்சி செய்வதால், இந்த இயக்கம் மிக முக்கியமானதாகும். உங்கள் நேரத்தை எம்மிடம் அளித்தமைக்கு மிக்க நன்றி. நீங்கள் கேட்கும் எல்லாவிதமான கேள்விகளுக்கும் பதிலளிக்க எமது பக்தர்கள் ஆர்வமாக உள்ளனர். இந்த வாய்ப்பினை பயன்படுத்திக் கொண்டு உங்கள் வாழ்வை வெற்றிகரமானதாக்கிக் கொள்ளுங்கள்.

(**தமிழாக்கம்:** பிரியதர்ஷினி ராதா தேவி தாஸி)


# சித்தாந்தத்திற்காகப் போராடிய பக்திசித்தாந்தர்

பரந்தாமனின் பேர் பாட பாரெங்கும் பரவியுள்ள அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்திற்கு இந்த பக்திசித்தாந்தரே காரணம், இவரது கட்டளையின்படியே பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர் கிருஷ்ண பக்தியை மேல்நாடுகளில் பரப்பினார். சித்தாந்தத்தினை (ஆன்மீக அறிவின் இறுதி நிலையினை) மக்களுக்கு வழங்க அரும்பாடுபட்ட இந்த மஹாத்மாவின் புகழ்பாடி பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் கருணையைப் பெறுவோமாக.

**வழங்கியவர்:** திருமதி. கீத கோவிந்த தாஸி

## தோற்றம்

பிப்ரவரி 6ம் நாள், 1874ல் ஸ்ரீல பக்திசித்தாந்த சரஸ்வதி கோஸ்வாமி அவர்கள் ஒரிசா மாநிலத்திலுள்ள புகழ்பெற்ற புண்ணிய ஸ்தலமான ஜகந்நாத பூரியில் மாபெரும் வைஷ்ணவரான ஸ்ரீல பக்திவினோத தாகூருக்கு நான்காவது மகனாகப் பிறந்தார். பிமல பிரஸாத் என்று பெயரிடப்பட்ட அவர், பிற்காலத்தில் மிகுந்த அறிவாளியாகவும் பகவானின் புகழை உலகெங்கும் பரப்பும் உயர்ந்த போதகராகவும் திகழ்வார் என ஜோதிடர்கள் கூறினர். அதுமட்டுமின்றி, ஒரு மஹா புருஷருக்கான அனைத்து இலட்சணங்களும் அடங்கிய வேறொரு ஜாதகத்தை அதுவரை பார்த்ததேயில்லை என்றும் அவர்கள் கூறினர்.



## ஜகந்நாதரின் அருள்

பிமல பிரஸாத் ஐந்து மாதக் குழந்தையாக இருந்தபோது வருடந்தோறும் கொண்டாடப்படும் ஜகந்நாதரின் ரதயாத்திரை திருவிழா வந்தது. ஸ்ரீல பக்திவினோத தாகூரின் வீட்டின் முன் வந்த ரதம், உடனே நின்று விட்டது. பக்தர்கள் எவ்வளவோ முயன்றும் ரதம் நகரவில்லை. பகவான் ஜகந்நாதர் ஸ்ரீல பக்திவினோத தாகூரின் வீட்டின் முன்பு நிற்க விரும்பினார் என்பது அனைவருக்கும் நன்றாகப் புரிந்தது. அந்த அரிய சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொண்டு பிமல பிரஸாத்தின் தாயார் குழந்தையை ஜகந்நாதரின் திருவடிகளில் சேர்த்தார். உடனடியாக ஜகந்நாதரின் கழுத்திலிருந்த மாலைகுழந்தையின்கழுத்தில்விழுந்தது. குழுமியிருந்தோர் அனைவரும் அதனை ஜகந்நாதரின் தனிப்பட்ட கருணையாகக் கொண்டாடினர்.

## குழந்தைப் பருவம்

கிருஷ்ண உணர்வை பரப்பும் உன்னத தொண்டிற்காக தனக்கு ஒரு தெய்வீக மகன் வேண்டும் என்பது ஸ்ரீல பக்திவினோத தாகூரின் தீவிரமான விருப்பமாகும். பிமல பிரஸாத்திடம் இருந்த ஆன்மீக நாட்டத்தைக் கண்டு மகிழ்ச்சியடைந்த அவர், மிகக் கவனமான முறையில் தன் மகனுக்கு கிருஷ்ணரின் திருநாமத்தை ஜெபிப்பதிலும், விக்ரஹ ஆராதனையிலும் பயிற்சியளித்தார்.

பிமல பிரஸாத் மிகவும் தனித்தன்மை வாய்ந்தவர். அவருக்கு நான்கு வயது இருக்கும் போது, தந்தை வாங்கி வைத்திருந்த ஒரு மாம்பழத்தை எடுத்துச் சாப்பிட்டு விட்டார். மாம்பழம் பகவானுக்கு நைவேத்யம் செய்யப்படவில்லை என்றும், நைவேத்யம் செய்யாதவற்றை உண்பது தவறு என்றும், தந்தை சுட்டிக்காட்ட, சிறுவன் மிகவும் வருந்தினான். நைவேத்யம் செய்யப்படாதவற்றை சாப்பிடக் கூடாது என்றும், இனிமேல் வாழ்நாளில் மாம்பழமே சாப்பிட மாட்டேன் என்றும் முடிவெடுத்தார். அந்த உறுதிமொழியை வாழ்நாள் முழுவதும் கடைப்பிடித்தார்



என்பதிலிருந்து அவரது உறுதியை உணரலாம்.

மற்ற சிறுவர்களைப் போல பிமல பிரஸாத் விளையாடுவதில் நேரத்தை வீணடிக்க மாட்டார். தந்தை கூறும் ஆன்மீக விஷயங்களை சிறு வயதிலிருந்தே மிகவும் கவனமாக கேட்பார். ஏழு வயதான போதே பகவத் கீதையின் 700 ஸ்லோகங்களையும் மனப்பாடம் செய்தது மட்டுமின்றி, அவற்றிற்கு தெளிவான விளக்கமும் கொடுப்பார். சற்று வளர்ந்த பின்னர், புத்தகங்களை தொகுத்து அச்சிடுவதில் அவரின் தந்தை அவருக்கு பயிற்சி கொடுத்தார். தந்தை எங்கெல்லாம் ஆன்மீக சொற்பொழிவு ஆற்றுகின்றாரோ, அங்கெல்லாம் பிமல பிரஸாத் உடனிருப்பார்.

## கல்வி

பிமல பிரஸாத், கணிதத்திலும் ஜோதிடத்திலும் மிகவும் தேர்ந்தவராக விளங்கினார், மிகச்சிறந்த நினைவாற்றலைக் கொண்டிருந்தார். பாடங்களை ஒருமுறை கேட்டாலே போதும் அவற்றை மனப்பாடமாக கூறிவிடுவார். தன்னுடைய எல்லா நேரத்தையும் வேத பாடங்களை படிப்பதில் அவர் செலவிட்டார். ஆசிரியர்கள் ஊக்கம் கொடுத்தபோதிலும், அவர் பௌதிக கல்வியை விட ஆன்மீக ஞானத்திற்கே முக்கியத்துவம் கொடுத்தார். ஓய்வு நேரங்களில் நண்பர்களை அழைத்து ஆன்மீக விஷயங்களைப் பற்றி கலந்துரையாடுவார். அவருடைய ஜோதிட அறிவினால் திருப்தியுற்ற பண்டிதர்கள், அவருக்கு **“சித்தாந்த சரஸ்வதி”** என்னும் பட்டப் பெயரைச் சூட்டினர்.

1892ம் ஆண்டு, தனது 18ம் வயதில், கல்கத்தாவில் உள்ள சமஸ்கிருத கல்லூரிக்குச் சென்றார். அதில் அவர் மிகச்சிறந்த மாணவனாகத் திகழ்ந்தார், இருப்பினும் தன் வாழ்வை பகவானின் தொண்டிற்கு அர்ப்பணிப்பதற்காக மூன்று ஆண்டுகளிலேயே கல்லூரிப் படிப்பை விட்டுவிட்டார்.

## தீட்சை

திருமணம் செய்து இல்லறத்தில் ஈடுபட சிறிதும் நாட்டமில்லாமல் இருந்த பக்தி சித்தாந்த சரஸ்வதியை 1898ம் ஆண்டு, ஸ்ரீல பக்திவினோத தாகூர், கௌர கிஷோர தாஸ பாபாஜியிடமிருந்து ஆன்மீக தீட்சை பெறும்படி அறிவுறுத்தினார். கௌர கிஷோர தாஸ பாபாஜியோ பக்திசித்தாந்த சரஸ்வதியை பலமுறை சோதித்து, அவரது திடமான பக்தியைக் கண்டு, இறுதியில் தீட்சை வழங்கினார்.



**மேலே:** சந்நியாசம் வாங்கிய சமயத்தில் ஸ்ரீல பக்திசித்தாந்தர்
**இடது ஓரம்:** மாணவப் பருவத்தில் விமல பிரஸாத்

## 100 கோடி நாம ஜெபம்

1905ம் ஆண்டில், தனது 31வது வயதில், 100 கோடி திருநாமங்களை ஜெபிப்பது என்னும் மாபெரும் விரதத்தை பக்திசித்தாந்த சரஸ்வதி மேற்கொண்டார். தினசரி குறைந்தது மூன்று இலட்சம் திருநாமங்கள் என்று ஜெபம் செய்த அவருக்கு நூறு கோடி நாம ஜெபத்தை முடிக்க ஒன்பது வருடங்களுக்கு மேலாயின. பல்வேறு சிரமங்களுக்கு மத்தியிலும் இடைவிடாது ஜெபம் செய்தார். மாயாப்பூரிலுள்ள யோகபீட் என்னுமிடத்தில் ஒரு சிறு குடிசையை அமைத்து, கடும் குளிர், வெயில், மற்றும் மழைக்கு மத்தியிலும் சாதாரண உடையுடன் ஜெபம் செய்து வந்தார். கால்களில் இரத்தம் வடிந்த போதிலும் காலணி அணிய மாட்டார். சிறிதளவு வெறும் சாதத்தை ஒரு நாளில் ஒருமுறை மட்டுமே உண்டு வந்தார், குடிசையின் மண் தரையில் குறைந்த நேரம் உறங்கிய அவர், மழைக்காலத்தில் தனது ஒழுகும் குடிசையினுள் குடை பிடித்தபடி ஜெபம் செய்து வந்தார். இந்த விரதத்தின் போதுகூட யோகபீடத்தின் நிர்வாகப் பணிகளிலும் சைதன்ய சரிதாம்ருதத்திற்கு விளக்கவுரை எழுதுவதிலும் ஈடுபட்டார்.

## பிறப்பின் மூலம் பிராமணரா

1911, ஆகஸ்ட் மாதத்தில் சில ஸ்மார்த்த பிராமணர்கள் நடத்திய கருத்தரங்கில் பங்கேற்க பக்திவினோத தாகூருக்கு அழைப்பு வந்தது. அக்காலத்தில் பிராமண குலத்தில் பிறந்தவர்கள் மட்டுமே விக்ரஹ வழிபாடு செய்யவும் சீடர்களை ஏற்றுக்கொள்ளவும் அனுமதிக்கப்பட்டனர். ஆனால் சாஸ்திரக் கொள்கைகளின்படி, பிராமணன் என்பது குலத்தினால் முடிவு செய்யப்படுவதில்லை, ஒருவரின் குணத்தையும் செயலையுமே அடிப்படையாகக் கொண்டது. போலி பிராமணர்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க பக்திவினோத தாகூர் விரும்பினார். ஆனால் கருத்தரங்கம் நடைபெறும் போது அவருக்கு உடல்நலம் சரியில்லாமல் போனது. எனவே, தன் மகனை அதில் கலந்துகொள்ள அனுப்பினார். அக்கருத்தரங்கில் இந்தியா முழுவதிலுமிருந்து மாயாவாதிகளும் ஸ்மார்த்த பிராமணர்களும் கூடியிருந்தனர். பண்டிதரான பக்திசித்தாந்த சரஸ்வதி பேசும் போது சாஸ்திரங்களை மேற்கோள் காட்டி அவர்களுடைய வாதங்களை முறியடித்தார். சஞ்சலமுற்ற பண்டிதர்கள் அவரை தோற்கடிக்க முயன்றனர், ஆனால் அவரோ சரியான மேற்கோள்களைக் காட்டி அவர்களின் வாதங்களை முறியடித்தார். இவ்வாறாக மூன்று நாள்கள் நடந்த விவாதத்தின் இறுதி நாளில், பக்திசித்தாந்த சரஸ்வதி இரண்டு மணி நேரம் உரையாற்றினார். எவராலும் ஒரு வார்த்தைகூட பேச முடியாமல் போனது. அனைவரும் அவரை ஆச்சாரியராக ஏற்றுக் கொண்டு ஆசி பெறுவதற்கு முண்டியடித்துக் கொண்டு வந்தனர்.

## ஆன்மீக குருவின் மறைவு

பக்திசித்தாந்த சரஸ்வதியின் தந்தையாகவும் உபதேச குருவாகவும் செயல்பட்ட ஸ்ரீல பக்திவினோத தாகூர், 1914ம் ஆண்டு மறைந்தார். ஒரு வருடம் கழித்து, பக்திசித்தாந்த சரஸ்வதியின் தீட்சை குருவான ஸ்ரீல கௌர கிஷோர தாஸ பாபாஜியும் மறைந்தார். இதனால் பக்திசித்தாந்த சரஸ்வதி மிகவும் துயருற்றார். பக்தி பிரச்சாரத்தை எப்படி நடத்துவது, எவ்வாறு தொடர்வது என்று வேதனையுற்றார். அச்சமயத்தில், கனவு போன்று தோன்றிய ஒரு நிகழ்ச்சியில், பகவான் ஸ்ரீ சைதன்ய மஹாபிரபுவும் அவரது சகாக்களும் நடனமாடிக் கொண்டிருக்கும் காட்சியைக் கண்டார். அவர்களுடன் கௌர கிஷோரும் பக்தி வினோத தாகூரும் கூட இருந்தனர். அவர்கள், பக்திசித்தாந்தரிடம், எப்போதும் பகவானின் நாமம், ரூபம், குணம் மற்றும் லீலைகளைப் பாடும்படியும், புனிதமான பக்தித் தொண்டினை பிரச்சாரம் செய்யும்படியும் கட்டளையிட்டனர். மேலும், "நாங்கள் எப்போதும் உன்னோடு இருப்போம்," என்று உறுதியளித்தனர்.

## சந்நியாசம், யுக்த வைராக்யம்

1918ல் சந்நியாசம் மேற்கொண்ட பக்திசித்தாந்தர் பல வகையிலும் தன்னை ஒரு புரட்சிகரமான அசாதாரணமான சந்நியாசியாக நிரூபித்தார். தனிமையான இடங்களில் வாழ்ந்து மக்களோடு பழகுவதை தவிர்க்கும் துறவிகளுக்கு மத்தியில், ஸ்ரீ சைதன்ய மஹாபிரபுவின்



**மேலே:** கிருஷ்ண சேவையில் அனைத்தையும் ஈடுபடுத்தும் ஸ்ரீல பக்திசித்தாந்தர்

முக்கிய தொண்டர்களாகிய ரூப மற்றும் சநாதனரின் வழி நடந்த பக்திசித்தாந்த சரஸ்வதி, உலகப் பொருள்களை பகவத் கைங்கர்யத்தில் ஈடுபடுத்தினார், முக்கியமாக பிரச்சாரத்தில் உபயோகித்தார். உலகப் பொருள்களை சுயநலனுக்காக அன்றி பகவானின் தொண்டில் ஈடுபடுத்துதல் என்னும் **யுக்த வைராக்ய** முறையை அவர் கையாண்டார்.

## சிங்கம் போன்ற குரு

சுயநலவாதிகளான ஸஹஜியர்கள், ஸ்மார்த்த பிராமணர்கள் மற்றும் போலி சாமியார்களுக்கு எதிராக பக்திசித்தாந்த சரஸ்வதி புத்திக் கூர்மையுடன் பிரச்சாரம் செய்தார். ஸ்ரீ சைதன்யரின் உபதேசங் களை உலகில் நிலைநாட்ட அரும்பாடுபட்ட அவர் அற்புதமான பலனையும் எட்டினார். அவர் எங்கு சென்றாலும், அங்கிருந்த போலிகள், எங்கே தோற்றுவிடுவோமோ என்ற பயத்தில் பறந்து ஓடுவர். சிறிதும் விட்டுக் கொடுக்காமல் சிங்கம் போன்று திடமாக பேசியதால், அவருக்கு "**ஆசார்ய கேசரி,**" அதாவது சிங்கம் போன்ற குரு என்ற பட்டம் கிட்டியது. அவரை தாக்கவும் அழிக்கவும் முயன்ற தீயவர்கள் தங்களது முயற்சிகளில் தோல்வியுற்றனர்.

சிங்கம் போன்ற குரு என்று அழைக் கப்பட்ட போதிலும், வைஷ்ணவருக்கே உரிய பணிவுடன் திகழ்ந்தார். தனக்கு பல்லாயிரக்கணக்கான சீடர்கள் இருந்தும் அவர் தன்னை ஒருநாளும் தலைவனாக நினைத்ததில்லை. மற்றவர்களுக்கு மிகச் சிறந்த வழிகாட்டியாகவும் உதாரண புருஷராகவும் விளங்கினார்.

## கௌடிய மடம்

பக்தி பிரச்சாரத்தை முழுமைப்படுத்த ஓர் ஒழுக்கமான நிறுவனம் தேவைப் பட்டதால், 1920ல் ஸ்ரீல பக்திசித்தாந்த சரஸ்வதி கௌடிய மடத்தை நிறுவினார். அதில் ஆயிரக்கணக்கான சீடர்களுக்கு தீட்சை வழங்கினார். மேலும், இந்தியா முழுவதும் 64 கோவில்களை கட்டினார், விக்ரஹங்களை பிரதிஷ்டை செய்தார். தனது சீடர்கள் வீடுவீடாகச் சென்று ஆன்மீக அறிவை விநியோகம் செய்ய கட்டளையிட்டார், இந்தியா முழுவதும் பயணம் செய்து பிரச்சாரம் செய்தார்.

## மிகச்சிறந்த சீடர்

பக்திசித்தாந்தரின் சீடர்கள் பலர் உயர்ந்துவிளங்கியபோதிலும், அவர்களில் ஒருவர் தன்னிகரற்று விளங்கினார். இன்று உலகமெங்கும் பரவியிருக்கும் இஸ்கான் இயக்கத்தை நிறுவிய ஸ்ரீல பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதரே அவர். தனது வெற்றிக்கு காரணம் தனது குருவான பக்திசித்தாந்தரின் கருணையே என்று அவர் அடிக்கடி கூறுவதுண்டு. ஆங்கிலம் பேசும் மேற்கத்திய நாடு களில் பிரச்சாரம் செய்யும்படியும், பணம் கிடைத்தால் புத்தகங்களை அச்சடித்து விநியோகம் செய்யும்படியும் பக்தி சித்தாந்தரால் இடப்பட்ட கட்டளையே இன்று உலகமெங்கும் கிருஷ்ண பக்தி பரவியிருப்பதற்கான காரணம்.

## அவரின் மறைவு

1937, ஜனவரி 1, ஸ்ரீல பக்திசித்தாந்த சரஸ்வதி இம்மண்ணுலகை விட்டு மறைந்தார். கௌடிய வைஷ்ணவ சம்பிர தாயத்திற்கு புத்துயிரளித்த பக்திசித்தாந்தர் ஓர் ஆன்மீகப் புரட்சியை ஏற்படுத்தியவர் என்றால் அது மிகையல்ல.

*திருமதி. கீத கோவிந்த தாஸி, கடந்த பதினைந்து வருடங்களாக கிருஷ்ண பக்தியை குடும்பப் பொறுப்புகளுடன் இணைந்து பயிற்சி செய்து வருகிறார்.*

# உயிர் காத்த பகவத் கீதை

அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் முக்கிய நற்தொண்டுகளில் ஒன்று, ஆன்மீக புத்தகங்களை மக்களின் மத்தியில் பரவலாக விநியோகம் செய்தல். குறிப்பாக, டிசம்பர் மாதத்தில். ஸ்ரீல பிரபுபாதரின் "பகவத் கீதை உண்மையுருவில்" என்னும் புத்தகம் மக்களிடம் பெருமளவில் விநியோகிக்கப்படுவது வழக்கம். இதன்படி, பக்தரொருவர் பகவத் கீதையை ஏந்தியபடி மும்பை மாநகரின் தெருக்களில் வீடுவீடாகச் சென்று கொண்டிருந்தார். ஒரு வீட்டின் முன்பு வந்த அவர், கதவைத் தட்டினார், யாரும் வராததால் பலமாக இருமுறை தட்ட, ஒரு குடும்பத் தலைவி கோபத்துடன் கதவைத் திறந்து, "நான் மிகவும் முக்கிய வேலையில் உள்ளேன்" என்று கூறிவிட்டு கதவைத் தாழிடுவதற்கு முன்பு, இப்பக்தர் சற்று உள்ளே நுழைந்தபடி, பகவத் கீதையைக் கொடுத்தார். சற்று கோபம் தனிந்து கீதையை ஆர்வத்துடன் அவரும் பார்க்க, பக்தரும் கீதையின் தத்துவங்களை, குறிப்பாக, ஆத்மா மற்றும் உடல் பற்றியவற்றை எடுத்துரைத்தார். மகிழ்ச்சியடைந்த அப்பெண்மணி கீதையைப் பெற்று கொண்டார். அதன் பின்னர், அப்பக்தரை வீட்டிற்குள் அழைத்துச் சென்ற அப்பெண்மனி, தான் "தற்கொலை முயற்சி" என்னும் முக்கிய வேலையில் ஈடுபட்டிருந்ததை சுட்டிக் காட்டினார், மின்விசிறியில் தொங்கிய கயிறு, நாற்காலி ஆகியவற்றை பக்தரிடம் காட்டி நன்றி தெரிவித்தார் அப்பெண்மணி. வாழ்வில் விரக்தியடைந்திருந்து, தற்கொலை செய்ய இருந்த சரியான தருணத்தில், பகவத் கீதையினால் மறுபிறவி பெற்ற அவர், தற்போது தீவிர கிருஷ்ண பக்தராக வளர்ந்து வருகிறார்.



திருவண்ணாமலை தீபத் திருவிழாவில் கூடிய இலட்சக்கணக்கான மக்களிடம் இஸ்கான் பக்தர்கள் பகவத் கீதையை விநியோகிக்கும் காட்சி.

# மொரீசியஸ் நாட்டில் புதியதோர் கிருஷ்ண ஆலயம்

நவம்பர் 29, 2009: அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கம் (இஸ்கான்) சார்பில், மொரீசியஸ் நாட்டின் திரியோலெட் நகரில் புதியதாக கட்டப்பட்டுள்ள ருக்மிணி துவாரகாதீஷ் கோவில், மொரீசியஸை சார்ந்த பல்வேறு பக்தர்கள் மற்றும் உலகத்தின் பல்வேறு பகுதிகளைச் சார்ந்த பக்தர்களின் முன்னிலையில் பிரம்மாண்டமான முறையில் திறக்கப்பட்டது.

மடகாஸ்கர் தீவிற்குக் கிழக்கே இந்தியப் பெருங்கடலில் அமைந்துள்ள சிறிய தீவு மொரீசியஸ் என்னும் நாடு. பலதரப்பட்ட மக்களையும் பண்பாடுகளையும் தாங்கியுள்ள இத்தீவில் இந்தியர்கள் பலரும் வசித்து வருகின்றனர். இஸ்கானின் ஸ்தாபக ஆச்சாரியரான ஸ்ரீல பிரபுபாதர் 1975ல் இங்கு விஜயம் செய்து கிருஷ்ண பக்திப் பிரச்சாரத்தினை தொடங்கி வைத்தார்.

தவத்திரு. பக்தி சைதன்ய ஸ்வாமி, தவத்திரு. பக்தி பிருங்க கோவிந்த ஸ்வாமி, தவத்திரு. நவயோகேந்திர ஸ்வாமி, தவத்திரு. பக்தி விஸ்வம்பர மாதவ ஸ்வாமி, தவத்திரு. வேதவியாஸ் பிரிய ஸ்வாமி, அருட்திரு தீனபந்து தாஸ், அருட்திரு பாஷுகோஸ் தாஸ் உட்பட பல்வேறு மூத்த இஸ்கான் பக்தர்கள் நிகழ்ச்சியில் பங்கு கொண்டு சிறப்பித்தனர்.

நவம்பர் 27ம் நாள் வாஸ்து பூஜை மற்றும் ஆதிவாசத்துடன் தொடங்கிய சடங்குகள், ரிக் வேத பாராயணம், கீதை பாராயணம், மற்றும் ஹரி நாம சங்கீர்த்தனத்துடன் முறையாக நடந்தன.



குழுமியிருந்த நூற்றுக்கணக்கான பக்தர்களின் மத்தியில் இஸ்கானின் மூத்த பக்தர்கள் உபன்யாஸங்களை வழங்கினர். ஞாயிறு அன்று கும்பாபிஷேகம், மஹா அபிஷேகம், பல்வேறு சொற்பொழிவுகள், அதியற்புதமான பிரசாத விருந்து என பல்வேறு நிகழ்ச்சிகள், கண்டு ரசித்த கண்களுக்கு ஆத்ம திருப்தியை நல்கின. ஸ்ரீ ஸ்ரீ ருக்மிணி துவாரகாதீஷ், ஸ்ரீ பிரகலாத நரசிம்மர், ஸ்ரீநாத்ஜி மற்றும் கௌர-நித்தாய் விக்ரஹங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டனர்.



மஹா அபிஷேக நேரத்தில் மொரீசியஸ் நாட்டின் உயர் அமைச்சர்களில் ஒருவரான திரு அனில் குமார் பச்சோ அவர்கள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

கும்பாபிஷேக விழாவிற்கு சில நாள்களுக்கு முன், தவத்திரு நவயோகேந்திர ஸ்வாமியின் தலைமையில் மொரீசியஸ் நாட்டின் குடியரசுத் தலைவரான திரு. அனிருத் ஜகந்நாதரை பக்தர்கள் சந்தித்து அழைப்பு விடுத்தனர். திரியோலெட் நகரில் கட்டப்பட்டுள்ள கோவிலால் பெருமகிழ்ச்சி அடைந்த அவர், நிகழ்ச்சிக்கு ஒருநாள் முன்னதாக இந்தியா செல்லவிருப்பதால், கும்பாபிஷேக நிகழ்ச்சியில் கலந்து கொள்வதில் தனது இயலாமையை தெரிவித்தார். இருப்பினும் பின்வரும் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதாக உறுதியளித்துள்ளார்.



**மேலே:** குடியரசுத் தலைவருடன் இஸ்கான் பக்தர்கள்

**அதற்கும் மேலே:** பிரதிஷ்டை செய்யப்பட்ட அழகான ருக்மிணி துவாரகாதீஷ் (கிருஷ்ணர்) விக்ரஹங்கள்

**இடது:** நிகழ்ச்சியில் கலந்து கொண்ட கூட்டத்தின் ஒரு பகுதி

# உலகமே கொண்டாடும் தேர் திருவிழா

ஒரிசாவின் பூரி நகரில் மட்டுமே கொண்டாடப்பட்டு வந்த ரதயாத்திரை தற்போது உலகமெங்கும் கொண்டாடப்படுகிறது. அது குறித்து இதோ சில தகவல்கள்.



### பூரி ரதயாத்திரை

இன்று உலகம் முழுவதும் கொண்டாடப்படும் ஸ்ரீ ஜகந்நாதரின் ரதயாத்திரை (தேர் திருவிழா) சுமார் ஐயாயிரம் வருடங்களாக ஜகந்நாத பூரியில் கொண்டாடப்பட்டு வருகிறது. வருடந்தோறும் நடைபெறும் இந்த மாபெரும் திருவிழாவில் பங்குகொள்ள இலட்சக்கணக்கான மக்கள் ஒரிசா மாநிலம் முழுவதிலிருந்தும் மட்டுமின்றி நாட்டின் இதர பகுதிகளிலிருந்தும் வெளி நாடுகளிலிருந்தும் கூடுகின்றனர். கட்டுண்ட ஜீவன்களின் மீது பேரன்பு கொண்டுள்ள பகவான் ஸ்ரீ ஜகந்நாதர், கருணையுடன் வெளியில் வந்து தானே காட்சி தருகிறார். (மேலும் பார்க்க: ஜகந்நாதர் ஜகத்தில் தோன்றிய வரலாறு)

### குருக்ஷேத்திரத்திலிருந்து விருந்தாவனம்

பகவான் ஸ்ரீ கிருஷ்ணரை குருக்ஷேத்திரத்தில் சூரிய கிரகணத்தின் போது சந்தித்த ஸ்ரீமதி ராதாராணி, அவரை விருந்தாவனத்திற்கு அழைத்துச் செல்ல விருப்பப்பட்டார். அதன் படி, கிருஷ்ணர் விருந்தாவனம் நோக்கிச் செல்வதே இந்த ரதயாத்திரையின் உட்பொருளாகும். குருக்ஷேத்திரத்தை பிரதிபலிக்கும் ஜகந்நாதர் கோவிலிலிருந்து விருந்தாவனத்தை பிரதிபலிக்கும் குண்டிசா கோவில் வரை இந்த ரதயாத்திரை நடத்தப்பட்டு வருகிறது.

### பகவான் சைதன்யர்

கிருஷ்ண பக்தியை பாமரர்களுக்கும் கற்றுக் கொடுப்பதற்காக, பகவான் ஸ்ரீ கிருஷ்ணர், சுமார் 500 வருடங்களுக்கு முன்பு, பக்தரின் வடிவில் ஸ்ரீ சைதன்ய மஹாபிரபுவாக அவதரித்தார். அவர் சாக்ஷாத் கிருஷ்ணரே என்றபோதிலும், ராதாராணியின் மனோபாவத்தைத் தாங்கி அவதரித்தார். மேற்கு வங்காளத்தில் தோன்றிய அவர், சந்நியாசம் ஏற்ற பின்னர், பூரியில் தங்கியிருந்தார். ஒவ்வொரு வருடமும் நடைபெற்ற ரதயாத்திரை திருவிழாவில் கலந்து கொண்டு ஆன்மீக ஆனந்தத்தின் மாபெரும் நிலைகளை வெளிப்படுத்தினார்.

### சிறு வயதில் ஸ்ரீல பிரபுபாதர் நடத்திய ரதயாத்திரை

இஸ்கான் அமைப்பின் ஸ்தாபகரான தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர், வைஷ்ணவ குடும்பத்தில் பிறந்திருந்த காரணத்தினால், சிறு வயதிலிருந்தே கிருஷ்ண பக்தியை ஆழமாகப் பயிற்சி செய்து வந்தார். சிறுவனாக இருந்தபோது அவருக்கு அபய் சரண் என்று பெயர். பூரி ரதயாத்திரையை போன்றே கல்கத்தாவின் பல பகுதிகளில் ரதயாத்திரை நடப்பது வழக்கம். அபய் வசித்த பகுதிகளில் நடைபெற்ற ரதயாத்திரை தான் கல்கத்தாவிலேயே பெரியது.

அதைக் கண்டு ஆர்வம் கொண்ட அபய், தனக்கென்று தனியாக ஒரு ரதம் வேண்டும் என்று தந்தையிடம் முறையிட, அவரும் ஏற்பாடு செய்தார். ஐந்து வயதே நிரம்பியிருந்த அபய் தனது சகோதரியான பவதாரணியுடன் இணைந்து நண்பர்கள் சூழ ரதயாத்திரை நிகழ்ச்சியை பூரியில் நடைபெறுவது போலவே எட்டு நாள் திருவிழாவாக நடத்தினார். அண்டை வீட்டார் அனைவரும் ஆச்சரியப்பட்டனர். பிற்காலத்தில் அபய் உலகெங்கிலும் இந்த ரதயாத்திரையை கொண்டு செல்ல உள்ளார் என்பதை அப்போது அவர்கள் எவரும் அறியவில்லை.



**மேலே:** ரதயாத்திரை நடத்தும் அபய்
**இடது பக்கம் மேலே:** இலட்சக்கணக்கான பக்தர்கள் கூடும் பூரி ரதயாத்திரை



## அமெரிக்காவில் ஜகந்நாதர்

1965ம் ஆண்டில் அமெரிக்கா சென்று பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் 1966ல் இஸ்கான் அமைப்பினை ஸ்தாபகம் செய்த பின்னர், ஸ்ரீல பிரபுபாதர் தனது சீடர்களை படிப்படியாக பக்தியின் பல்வேறு அங்கங்களில் பயிற்சியளித்தார். அத்தகு பயிற்சிகளில் ஒன்று, விக்ரஹ ஆராதனை. வெளிநாடுகளில் விக்ரஹ பூஜை செய்யும்போது புதிய பக்தர்கள் பல்வேறு குற்றங்களை இழைக்கக்கூடும் என்பதால், ஸ்ரீல பிரபுபாதர் ஆரம்ப கால கட்டத்தில் கருணையின் கடலாகிய ஸ்ரீ ஜகந்நாதர், பலதேவர் மற்றும் சுபத்ரையின் விக்ரஹங்களை வழிபடுவதற்கு கற்றுக் கொடுத்தார். ஜகந்நாதர் என்றால் இந்த ஜகத்திற்கே (உலகத்திற்கே) இறைவன் என்று பொருள். உலகத்திற்கே இறைவனான அவரது கருணையை ஒரு குறிப்பிட்ட நாட்டின் ஒரு குறிப்பிட்ட மக்களுக்கு மட்டுமின்றி உலகத்தவர் அனைவருக்கும் கிடைக்கச் செய்த பெருமை ஸ்ரீல பிரபுபாதரையே சாரும்.

## சான்பிரான்சிஸ்கோ ரதயாத்திரை

1968, ஜுலை 9, சரித்திரத்தில் எழுதப்பட வேண்டிய நாள். அன்றுதான் ஸ்ரீ ஜகந்நாதரின் ரதயாத்திரை முதன் முதலாக ஒரு வெளிநாட்டில் நடந்தேறியது. ஏதுமறியாத இளம் சீடர்கள், ஸ்ரீல பிரபுபாதரின் வழிகாட்டுதலை அப்படியே உள்ளது உள்ளபடி பின்பற்றினர், ரதயாத்திரை இந்த அளவிற்கு அமெரிக்க இளைஞர்களை கவரும் என்று எவரும் எதிர்பார்க்கவில்லை. அற்புத அலங்காரங்கள், விளம்பர பலூன்கள், அனைவருக்கும் அறுசுவை பிரசாதம், மெய் சிலிர்க்க வைத்த கீர்த்தனங்கள், ஆடல், பாடல் என்று அனைத்தும் அனைவருக்கும் ஆச்சரியத்தை அளித்தன.

## ரதயாத்திரையின் வளர்ச்சி

மேற்கத்தியர்கள் ரதயாத்திரைக்கு ஆர்வம் காட்டுவதை கவனித்த ஸ்ரீல பிரபுபாதர், இதனை பல்வேறு நகரங்களிலும் நடத்தி வைத்தார். மக்களை கிருஷ்ணரிடம் அழைத்து வர மிக முக்கிய அங்கமாக ரதயாத்திரை திருவிழா உருப்பெற்றது. இலண்டன், லாஸ்ஏஞ்சல்ஸ், நியூயார்க் உட்பட உலகின் பல்வேறு இடங்களில் ரதயாத்திரை திருவிழா பரவத் தொடங்கியது, விரைவிலேயே இஸ்கான் அமைப்பின் முக்கியத் திருவிழாவாக அமைந்தது.

## ரதயாத்திரை இன்று

எல்லா தரப்பட்ட மக்களும் போற்றும் ரதயாத்திரை நிகழ்ச்சி தற்போது உலகின் பல்வேறு இஸ்கான் மையங்களில் வருடந்தோறும் கொண்டாடப்பட்டு வருகிறது. பொதுமக்களும் ஆர்வமாக பங்கேற்கின்றனர். மேலை நாடுகள் உட்பட உலகின் பல பகுதியில் அரசாங்க விடுமுறை விடப்படும் அளவிற்கு ரதயாத்திரை பிரபலமாகி விட்டது.

தமிழகத்தில் சென்னையிலும் கோயம்புத்தூரிலும் ஜனவரி மாதத்தில் இத்திருவிழா வருடந்தோறும் அனுசரிக்கப் பட்டு வருகிறது. இத்திருவிழாவில் பங்கு கொண்டு ஊர் கூடி தேர் இழுப்போம் வாரீர்!

நன்றி, ஹரே கிருஷ்ண!




**மேலே:** ரதயாத்திரை, லாஸ்ஏஞ்ஜல்ஸ்
**இடது பக்கம் மேலே:** ரதயாத்திரை, இத்தாலி

# புலன்களைப் புனிதப்படுத்தும் விக்ரஹ வழிபாடு

**பக்தித் தொண்டின் அறுபத்தி நான்கு அங்கங்களை ஸ்ரீல ரூப கோஸ்வாமி அவர்கள் தனது படைப்பான பக்தி ரஸாம்ருத சிந்துவில் குறிப்பிட்டுள்ளார், அவற்றிலுள்ள ஐந்து அங்கங்கள் (திருநாம உச்சாடனம், ஸ்ரீமத் பாகவதத்தை கேட்டல், வைஷ்ணவர்களின் சங்கம், விக்ரஹ ஆராதனை, புனித ஸ்தலங்களில் வசித்தல் ஆகியவை) மிகவும் சக்தி வாய்ந்தவை என்றும், அவற்றின் மீதான ஓரளவு பற்றுதலும் பக்திப் பரவசத்தை ஏற்படுத்தும் என்றும் அவர் கூறியுள்ளார்.**

சென்ற இதழ்களில், திருநாம உச்சாடனம், ஸ்ரீமத் பாகவதத்தை கேட்டல் ஆகியவற்றைக் கண்டோம். தற்போது, விக்ரஹ ஆராதனை என்பது குறித்து அறியலாம்.

வழங்கியவர்: திரு. ஜெய கோபிநாத தாஸ்

## விக்ரஹம் என்றால் என்ன?

ஆன்மீக உலகில் வீற்றுள்ள புருஷோத்தமரான முழுமுதற் கடவுள் ஸ்ரீ கிருஷ்ணர், ஜடவுலக வாழ்வில் சிக்கித் தவிக்கும் ஜீவன்களின் மீது கருணை கொண்டு, பல்வேறு ரூபங்களில் இங்குத் தோன்றுகின்றார். மணல், களிமண், மரம், கல், மனம், உலோகம், மணிகள், வரைபடங்கள் ஆகிய எட்டு விதங்களில் அவர் தோற்றமளிக்கும் போது, அவருக்கு விக்ரஹம் என்று பெயர். விக்ரஹத்திற்கும் பகவானுக்கும் எவ்வித வேறுபாடும் கிடையாது. இதற்குப் பல உதாரணங்கள் உள்ளன: 1) விருந்தாவனத் திலிருந்த கோபால் என்னும் பகவானின் விக்ரஹம் அங்கிருந்து ஒரிசாவிலுள்ள வித்யா நகரம் என்னும் கிராமத்திற்கு சாட்சி சொல் வதற்காக நடந்து வந்தார்; சாட்சி கோபால் என்று பெயரும் பெற்றார். 2) ரெமுணா என்னுமிடத்திலுள்ள கோபிநாதர் விக்ரஹம் மாதவேந்திர பூரி என்னும் ஆச்சாரியருக்காக கீர் எனப்படும் பாலினால் செய்யப்பட்ட இனிப்பு பதார்த் தத்தினை ஒளித்து வைத்தார்; கீர் திருடிய கோபிநாதர் என்ற பெயரையும் பெற்றார்.



## விக்ரஹத்திற்கும் சிலைக்கும் உள்ள வேறுபாடு

ஆச்சாரியரால் பிரதிஷ்டை செய்யப் பட்டு பஞ்சராத்ர விதிமுறையின்படி வழி படப்படும் பகவானின் ரூபம், விக்ரஹம் எனப்படும். விக்ரஹம் சாக்ஷாத் ஸ்ரீ பகவானே. ஆனால் சாதாரண சிலையோ பகவான் அல்ல, அச்சிலையில் பகவான் இருக்க வேண்டுமென்று அவசியம் இல்லை. எனவே, விக்ரஹங்களை வழிபடுவது சிலையை வழிபடுவது அல்ல.

## பக்தியின் சக்தி வாய்ந்த அங்கம்

பக்தியின் அங்கங்களாக ஸ்ரீல ரூப கோஸ்வாமி 64 விஷயங்களை குறிப்பிட்டுள்ளார். அவற்றில் ஐந்து அங்கங்கள் மிகவும் சக்தி வாய்ந்தவை. இவை ஐந்தினைத் தவிர மீதமுள்ள 59 அங்கங்களில் குறைந்தது 35 அங்கங்களாவது விக்ரஹ வழிபாட்டுடன் தொடர்பு டையவையாகும். உதாரணமாக, விழாக்களை அனுஷ்டித்தல், விக்ரஹங்களின் முன்பு நடனமாடுதல், விக்ரஹங்களுக்கு மரியாதை செலுத்தும் பொருட்டு வணங்குதல் போன்ற அங்கங்கள் விக்ரஹ வழிபாட்டுடன் நெருங்கிய தொடர்புடையவை. முழு நம்பிக்கையுடனும் அன்புடனும் விக்ரஹ வழிபாட்டில் ஈடுபடும்படி ஸ்ரீல ரூப கோஸ்வாமி வலியுறுத்துகிறார். ஆனால் அந்த அன்பும் நம்பிக்கையும் ஒருவர் எவ்வாறு விக்ரஹங்களை புரிந்து

கொண்டுள்ளார் என்பதைப் பொறுத்ததே. விக்ரஹம் சாக்ஷாத் பகவானே என்னும் அறிவு இதற்கு மிகவும் அவசியம்.

## விக்ரஹ வழிபாடு

பகவான் தனது காரணமற்ற கருணையால் அர்சா விக்ரஹ ரூபத்தில் அவதரிக்கும்போது, கட்டுண்ட ஆத்மாக்களும் அவரைக் காணலாம், வழிபடலாம், தொண்டு செய்யலாம். சட்டதிட்டங்களை சரிவர கடைப்பிடித்து விக்ரஹ வழிபாடு செய்தால், அஃது ஒருவனை பக்தித் தொண்டில் நிலைத்திருக்கச் செய்யும். இந்த விக்ரஹ வழிபாட்டின் மூலம் ஒருவர் தனது எல்லா புலன்களையும் பக்தித் தொண்டில் ஈடுபடுத்த முடியும். அர்சா விக்ரஹ ஆராதனை என்பது பிரஹலாதரால் உரைக்கப்பட்ட ஒன்பது வகையான பக்தி முறைகளில் ஒன்று. விக்ரஹ வழிபாட்டின் பல்வேறு செயல்கள் மிகவும் நுட்பமானவையாகவோ சடங்காகவோ தோன்றலாம், ஆனால் இவற்றை நாம் முழு நம்பிக்கையுடனும் உற்சாகத்துடனும் கடைப்பிடித்தால் வழிபாட்டின் குறிக்கோளான கிருஷ்ண பிரேமையை அடைய முடியும். விக்ரஹ ஆராதனையின் நுட்பங்களை விளக்குவதற்காக நாரத பஞ்சராத்ரம், ஹரி பக்தி விலாஸ் ஆகிய புத்தகங்களை அடிப்படையாகக் கொண்டு, அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தில் ''பஞ்சராத்ர பிரதீப'' என்னும் புத்தகம் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

## முக்கிய அம்சம்

கிருஷ்ணரை எப்போதும் நினைத்துக் கொண்டிருத்தல்; அவரை ஒருபோதும் மறவாது இருத்தல் ஆகிய இரண்டு முக்கியக் கொள்கைகளை நிறைவேற்றும் பொருட்டு விக்ரஹ வழிபாட்டின் அனைத்து சட்டதிட்டங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

## ஏன் விக்ரஹ வழிபாடு

திருநாம ஜெபம் செய்வதன் மூலமாகவே ஒருவர் கிருஷ்ண பிரேமையை அடையலாம். அப்படியெனில், ஒருவர் ஏன் தீட்சை பெற்று, விக்ரஹ வழிபாட்டின் மந்திரங்களைப் பெற வேண்டும் என்ற கேள்வி எழலாம். நாம் ஜடவுடலைப் பெற்றிருக்கும் காரணத்தினால் நாம் எளிதில் களங்கமடைந்து விடுவோம்,

**ஒரு பக்தர் தனது முழு மனதுடன் ஆத்மார்த்தமாக கிருஷ்ணருக்குத் தொண்டு செய்தால், அற்புதமான ஆடைகளை அவருக்கு அர்ப்பணித்தால், ஒரு பூவை அர்ப்பணித்தால், கிருஷ்ணர் புன்னகைப்பார். கிருஷ்ணரின் அது போன்ற புன்னகையை ஒருமுறை பெற்று விட்டால் போதும். உனது வாழ்வின் குறிக்கோள் பூர்த்தியடையும்**

விக்ரஹ வழிபாட்டில் நாம் ஈடுபடும்போது நமது எல்லா புலன்களும் பகவானின் நேரடித் தொண்டில் ஈடுபடுத்தப்படுகின்றன, களங்கமடைந்துள்ள நமது மனதையும் நிதான நிலைக்கு கொண்டு வர முடியும். எனவே, புனித நாம ஜெபம் மட்டுமே இறையன்பை வழங்குவதற்குப் போதுமானது என்றபோதிலும், விக்ரஹ வழிபாடு விசேஷமாக வலியுறுத்தப்படுகிறது.

''ஒரு பக்தர் தனது முழு மனதுடன் ஆத்மார்த்தமாக கிருஷ்ணருக்குத் தொண்டு செய்தால், அற்புதமான ஆடைகளை அவருக்கு அர்ப்பணித்தால், ஒரு பூவை அர்ப்பணித்தால், கிருஷ்ணர் புன்னகைப்பார். கிருஷ்ணரின் அது போன்ற புன்னகையை ஒரு முறை பெற்று விட்டால் போதும். உனது வாழ்வின் குறிக்கோள் பூர்த்தியடையும்,'' என்று ஸ்ரீல பிரபுபாதர் தனது பாகவத உரையொன்றில் கூறுகிறார்.

## தகுதிகள்

விக்ரஹ வழிபாடு செய்வதற்குத் தகுதிகள் அவசியம், ஓர் ஆன்மீக குருவை அணுகி அவரிடம் தீட்சை பெற்றிருக்க வேண்டும். அவ்வாறு தீட்சை பெறாவிடில், பஞ்சராத்திரத்தில் கொடுக்கப்பட்டுள்ள விதிமுறைகளின்படி விக்ரஹங்களை வழிபட இயலாது. குறிப்பிட்ட விக்ரஹங்களுக்கு குறிப்பிட்ட மந்திரங்கள் உள்ளன, அம்மந்திரங்களை முறையான ஆன்மீக குருவிடமிருந்து பெற வேண்டும். அவ்வாறு பெறப்படாத மந்திரங்கள் வெறும் அகர வரிசையின் எழுத்துகளாக இருக்குமேயொழிய அவற்றில் சக்தி இருக்காது. ஸம்ப்ரதாய-விஹீனா யே மந்த்ராஸ் தே நிஷ்பலா மதா:, ''அங்கீகரிக்கப்பட்ட சம்பிரதாயத்தில் (குரு-சீடப் பரம்பரையில்) வரும் குருவிடமிருந்து பெறப்படாத மந்திரங்களுக்கு பலன் கிடையாது,'' என்று பத்ம புராணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கோவில்களில் பிரதிஷ்டை செய்யப் பட்டுள்ள விக்ரஹங்கள் மிகவுயர்ந்த தரத்தில் வழிபாடு செய்யப்பட வேண்டும் என்று ஸ்ரீல பிரபுபாதர் கட்டளையிட்டுள்ளார்.

## வீட்டில் வழிபாடு செய்தல்

ஆரம்ப நிலையிலுள்ள பக்தர்கள் (தீட்சை பெறாத பக்தர்கள்) தங்களது வீடுகளில் பகவான் மற்றும் அவரது தூய பக்தர்களின் படங்களை வைத்து வழிபாடு செய்ய வேண்டும். அதற்கு பிரதிஷ்டை செய்ய வேண்டிய அவசியமில்லை,




தீட்சை பெற்றிருக்க வேண்டிய கட்டாயமும் இல்லை. இவ்வாறு வழிபாடு செய்து பயிற்சி பெற்ற பக்தர்கள், அனுபவத்தினால் முன்னேறிய பின்னர், உலோகம், மரம், அல்லது கல்லாலான விக்ரஹத்தை பிரதிஷ்டை செய்து வழிபடலாம். ஆன்மீக குருவிடம் தீட்சை பெற்ற பின்னர், அத்தகு வழிபாட்டினை தொடங்குதல் உசிதமானது, விக்ரஹம் என்றால் குருவின் அனுமதியுடன் பிரதிஷ்டை செய்யப்பட்டவர்தான்.

## வழிபடும் விதம்

வீட்டில் விக்ரஹ வழிபாடு செய்வதற்கு வழிபாட்டு அறை ஒன்று தனியாக இருத்தல் மிகவும் நன்று. ஹரி பக்தி விலாஸ் போன்ற அதிகாரப் பூர்வமான சாஸ்திரங்களின்படி, பல்வேறு சூழ்நிலைகளுக்குத் தகுந்தாற் போல பல்வேறு விதமான வழிபாடும் பூஜையும் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. எனவே, இல்லத்தில் செய்யப்படும் வழிபாடு நமது சக்திக்கேற்ப இருக்கலாம். வீட்டு வழிபாட்டில் சில விதிகள் தளர்த்தப் பட்டாலும் கஞ்சத்தனம் கூடாது. மிகவும் ஏழையாக இருந்தாலொழிய நல்ல தரமான ஊதுபத்தி மற்றும் மலர்களுக் காவது ஏற்பாடு செய்ய வேண்டும்

## பூஜை பீடம் அமைக்கும் விதம்

ஸ்ரீ ஸ்ரீ ராதா கிருஷ்ணரின் படம் எல்லாவற்றிற்கும் மேலாக இருக்க வேண்டும். அவர்களுக்குக் கீழ் பஞ்ச தத்துவ படமும் நரசிம்மரின் படமும் இருக்க வேண்டும். அவர்களுக்குக் கீழ் ஆறு கோஸ்வாமிகளின் படமும் குரு பரம்பரையின் படமும் வைத்தல் அவசியம். கீழிருக்கும் படத்தில் காணப் படுவதுபோல அமைக்கலாம்.



## கடைப்பிடிக்க வேண்டிய அடிப்படை விதிகள்

குளித்த பின்பே பூஜை அறைக்குள் நுழைய வேண்டும், தூய்மையான உடைகளை உடுத்த வேண்டும். பூஜைக்கு பட்டாடை மிகவும் உகந்தது, பருத்தியுடையும் ஏற்கக்கூடியதே. கம்பளி தூயதாக இருந்தாலும் விக்ரஹ வழிபாட்டில் உபயோகப்படுத்தக் கூடாது. பாலியஸ்டர், டெரிகாட்டன், செயற்கை நூல் உடைகள் போன்றவற்றை விக்ரஹ வழிபாட்டின் போது தவிர்க்க வேண்டும். முறையான வைஷ்ணவ பண்பாட்டின்படி உடையணிய வேண்டும். ஆண்கள் தோதியும் (பஞ்சகச்சமும்) அங்கவஸ் திரமும் அணிய வேண்டும், பெண்கள் சேலை அணிய வேண்டும். மேற்கத்திய நாகரிகத்தின் உடைகளை அணியக் கூடாது. உடலின் மேற்பகுதியில் 12 இடங்களில் வைஷ்ணவ திலகம் இட்டிருக்க வேண்டும்.

பூஜை பொருள்களை தூய்மையாக வைத்திருக்க வேண்டும். பூஜை பொருள்கள் மட்டுமின்றி பூஜை பீடம், வழிபாட்டு அறை ஆகியவற்றையும் தூய்மையாகவும் அழகாகவும் வைத்திருத்தல் அவசியம்.

## முக்கிய சேவைகள்

ஆரத்தி, நைவேத்யம், சமைத்தல், அலங்காரம் செய்தல், ஓய்வு கொடுத்தல் போன்றவை அன்றாடம் செய்யப்பட வேண்டிய சேவைகள். தவத்திரு பக்தி விகாஸ ஸ்வாமியினால் எழுதப்பட்டுள்ள “பக்தி யோகம்--ஓர் அறிமுகம்” என்னும் புத்தகத்தில் இதுகுறித்த தெளிவான விளக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

வீட்டில் பல்வேறு ஆரத்திகளை செய்ய முடியாவிட்டாலும், காலையில் மங்கள ஆரத்தியும் மாலையில் சந்திய ஆரத்தியும் செய்வது பரிந்துரைக்கப்படுகிறது. கோவில்களில் பொதுவாக எட்டு முறை ஆரத்தியும் ஏழு முறை நைவேத்தியமும் செய்யப்படுவது வழக்கம்.

சமையலறையை பூஜை பீடத்தைப் போலவே பராமரிக்க வேண்டும். குளித்து, தூய ஆடைகளுடன், சமைக்கும் உணவை ருசி பார்க்காது சமைக்க வேண்டும். பகவானின் திருப்திக்காக சமைக்கின்றோம் என்ற உணர்வுடன் சமைக்க வேண்டும். சமையலறையில் சாப்பிடுவதோ, நாம் சாப்பிடும் பாத்திரங்களை சமைக்கும் பாத்திரங்களுடன் கலப்பதோ கூடாது. சமைக்கப்படும் உணவில் மீன், முட்டை, மற்றும் இதர அசைவப் பொருள்களோ, வெங்காயம், பூண்டு ஆகியவையோ இருக்கக் கூடாது.

சமைக்கப்பட்ட உணவின் மீது துளசி இலைகளை வைத்து, பகவானுக்கு நைவேத்தியம் செய்ய வேண்டும். நைவேத்தியம் செய்வதற்கு, ஸ்ரீல பிரபுபாதரின் பிரணாம மந்திரம், சைதன்ய மஹாபிரபுவின் பிரணாம மந்திரம், கிருஷ்ண மந்திரம் ஆகியவற்றை மூன்று முறை மணியை அடித்தபடி உச்சரிக்க வேண்டும். பூஜை அறையை விட்டு வெளியில் வந்து, பத்து அல்லது பதினைந்து நிமிடங்கள் ஹரே கிருஷ்ண மஹாமந்திரத்தை ஜெபம் செய்யவும். பின்னர், மீண்டும் பூஜை அறைக்குள் நுழைந்து, நைவேத்யம் செய்யப்பட்டவற்றை எடுத்துவிடவும். தற்போது அனைத்து உணவும் பிரசாதமாகி விட்டன. பிரசாதத்தை ஏற்போர் பாவமற்ற உணவை ஏற்கின்றனர் என்பது மட்டுமன்றி, கிருஷ்ண பக்தியிலும் நல்ல முன்னேற்றமடைவர்.

விக்ரஹ வழிபாடு குறித்து மேலும் விளக்கங்களை பெற அருகிலுள்ள இஸ்கான் கோவில்களை அணுகவும், அல்லது மூத்த இஸ்கான் பக்தர்களை தொடர்பு கொள்ளவும்.

பக்திப் பரவசத்தை ஏற்படுத்துவதில் அடுத்த அங்கமான, புனித ஸ்தலத்தில் வசித்தல், என்பது குறித்து அடுத்த இதழில் விவரிக்கப்படும்.

*ஜெய கோபிநாத தாஸ் B.E, அவர்கள் இஸ்கானின் சென்னை கிளையில் முழு நேர பிரம்மசாரியாக தொண்டாற்றி வருகிறார், கல்லூரி மாணவர்களிடம் பிரச்சாரம், புத்தக விநியோகம், கோயில் நிர்வாகம் போன்றவற்றில் ஈடுபட்டுள்ளார்.*

# சென்னையில் தவத்திரு ஜெயபதாக ஸ்வாமி

இஸ்கான் ஸ்தாபக ஆச்சாரியரான தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதரின் நேரடி சீடரும் இஸ்கான் மூத்த சந்நியாசிகளில் ஒருவருமான தவத்திரு ஜெயபதாக ஸ்வாமி அவர்கள் கடந்த நவம்பர் மாதம் 12ம் நாள் முதல் 23ம் நாள் வரை சென்னையில் தங்கி பக்தர்களுக்கு கிருஷ்ண பக்தியை நல்கினார். தினமும் அவரளித்த உபன்யாசங்களில் பக்தர்கள் பெரும் திரளாக பங்கு கொண்டு கிருஷ்ண பக்தித் தத்துவங்களை கேட்டறிந்தனர். பக்தர்களால் கேட்கப்பட்ட பல்வேறு கேள்விகளுக்கு அவர் குரு பரம்பரையின் அடிப்படையில் தெளிவான விளக்கங்களை வழங்கினார். நவம்பர் 15, ஞாயிறு அன்று சென்னையின் தியாகராய நகரிலுள்ள ரமணா ஹால் என்னுமிடத்தில் நடைபெற்ற சிறப்பு நிகழ்ச்சியில் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து நூற்றுக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டனர். பல பக்தர்கள் அத்தருணத்தில் அவரிடமிருந்து ஆன்மீக தீட்சையும் பெற்றனர். சென்னையில் இத்தனை நாள்கள் தவத்திரு ஜெயபதாக ஸ்வாமி மஹாராஜ் அவர்கள் தங்கியது சென்னைவாசிகளின் மாபெரும் அதிர்ஷ்டமே.





# இஸ்கான்—ஓர் அறிமுகம்

ஹரே கிருஷ்ண இயக்கம் என்ற பெயரில் உலகெங்கிலும் பிரபலமாக அறியப்படும் அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கம் (இஸ்கான், ISKCON—International Society for Krishna Consciousness) 1966ம் ஆண்டில் தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதரால் தொடங்கப்பட்டு, இன்று உலகெங்கிலும் நூற்றுக்கணக்கான கோவில்களைக் கொண்டுள்ளது. முறையான குரு சீடப் பரம்பரையில் வரும் இந்த இயக்கம், பகவத் கீதை, ஸ்ரீமத் பாகவதம் போன்ற வேத சாஸ்திரங்களின் அடிப்படையில் கிருஷ்ண பக்தியினை மக்கள் மத்தியில் பரப்பி வருகின்றது. கலி யுகத்தில் ஆன்மீகப் பக்குவம் அடைவதற்கு ஹரே கிருஷ்ண, ஹரே கிருஷ்ண, கிருஷ்ண கிருஷ்ண, ஹரே ஹரே/ ஹரே ராம, ஹரே ராம, ராம ராம, ஹரே ஹரே என்னும் மஹாமந்திரத்தினை உச்சரிப்பது மட்டுமே வழி என்று எல்லா வேத சாஸ்திரங்களும் எடுத்துரைக்கின்றன. அந்த ஹரி நாம சங்கீர்த்தனத்தினை ஜாதி, மதம், இனம், மொழி, அந்தஸ்து, கல்வி போன்ற எந்த பேதங்களும் இன்றி மனித குலத்தின் மேன்மைக்காக பரப்பி வரும் இவ்வியக்கம், அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து, பிரான்ஸ், ரஷ்யா, ஜெர்மனி, ஆஸ்திரேலியா, மலேசியா, தென் ஆப்பிரிக்கா உட்பட நூற்றுக் கணக்கான நாடுகளிலும் இந்தியாவின் பல்வேறு நகரங்களிலும் உற்சாகத்துடன் செயல்பட்டு வருகின்றது.

### இயக்கத்தின் செயல்பாடுகள்

* ஹரி நாம சங்கீர்த்தனம்
* பகவத்கீதைபோன்றவேதசாஸ்திரங்களைவிநியோகிப்பதன் மூலம் மக்களுக்கு ஆன்மீக அறிவினைப் புகட்டுதல்
* நவீன காலத்திற்குத் தகுந்த யோகப் பயிற்சியை கற்றுத் தருதல்
* மிகச்சிறந்த விக்ரஹ வழிபாடு
* அனைத்து மக்களுக்கும் பிரசாத விநியோகம்
* திசைமாற்றப்பட்ட நாகரிகத்தின் உண்மை உருவை வெளிக்காட்டுதல்
* கல்லூரி மாணவர்களுக்கு ஆன்மீகப் பயிற்சி
* இல்லங்களில் ஆன்மீக நிகழ்ச்சிகள்... மற்றும் பல

# ஸ்ரீமத் பாகவதம்

வேத இலக்கியங்கள் என்னும் மரத்தின் பழுத்த பழமாகக் கருதப்படும் ஸ்ரீமத் பாகவதமே வேத ஞானத்தின் பூரணமான அங்கீகரிக்கப்பட்ட சாஸ்திரமாகும். சுமார் ஐயாயிரம் வருடங்களுக்கு முன்பு தொகுக்கப்பட்ட இந்த வரலாற்றுக் காவியம், மாமுனிவரான கிருஷ்ண துவைபாயன வியாசரால் அவர் எழுதிய வேதாந்த சூத்திரத்திற்கு அவரே வழங்கிய விளக்கவுரையாகும். அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் ஸ்தாபக ஆச்சாரியரான தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர் அவர்கள் பன்னிரண்டு காண்டங்கள் கொண்ட அந்த மாபெரும் காவியத்திற்கு பதினெட்டு பெரும் புத்தகங்களில் விளக்கமளித்துள்ளார். அப்புத்தகத்தினை தொடர்ந்து இப்பத்திரிகையின் ஒவ்வொரு வெளியீட்டிலும் பிரசுரித்து வருகிறோம்.

## சாதுக்களின் கேள்விகள்

### முதல் காண்டம், ஸ்லோகம் ஒன்று

(தொடர்ச்சி) இந்த ஸ்லோகத்திலுள்ள *அபிக்ஞ*, *ஸ்வராட்* ஆகிய சொற்கள் குறிப்பிடத்தக்கவை. இவ்விரு சொற்களும் பரம புருஷரிடமிருந்து பிற எல்லா ஜீவராசிகளையும் வேறுபடுத்திக் காட்டுகின்றன. வேறெந்த ஜீவராசியும் *அபிக்ஞ* நிலையிலோ *ஸ்வராட்* நிலையிலோ இல்லை. அதாவது வேறு எவரும் பூரண உணர்வுடையவராகவோ பூரண சுதந்திரமானவராகவோ இல்லை. பிரம்ம தேவரே படைப்புத் தொழிலை நிறைவேற்ற பகவானை தியானிக்க வேண்டியுள்ளது. ஐன்ஸ்டீன் போன்ற பெரும் விஞ்ஞானிகளைப் பற்றி கூற வேண்டுமா! அத்தகு விஞ்ஞானிகளின் மூளைகள் நிச்சயமாக மனிதனால் உற்பத்தி செய்யப்படக் கூடியவையல்ல. விஞ்ஞானிகளால் அத்தகு மூளையை உற்பத்தி செய்ய முடியாது என்னும் பட்சத்தில், பகவானின் அதிகாரத்தை மறுக்கும் முட்டாள் நாத்திகர்களைப் பற்றிக் கூற என்ன இருக்கிறது! இறைவனோடு ஒன்றாகக் கலந்து விடுவோம் என்று தங்களைத் தாங்களே புகழ்பாடிக் கொள்ளும் அருவவாதிகளான மாயாவாதிகளும், *அபிக்ஞ* அல்லது *ஸ்வராட்* என்னும் நிலையில் இல்லை. அத்தகு அருவவாதிகள், இறைவனோடு ஒன்றாகக் கலப்பதற்குரிய அறிவைப் பெற கடுந்தவங்களை மேற்கொள்கின்றனர். ஆனால் இறுதியில், மடம் அல்லது கோவில் கட்டுவதற்குப் பணம் தரும் சில பணக்கார சீடர்களை நம்பி இருப்பவர்களாக அவர்கள் ஆகிவிடுகின்றனர். இராவணன் அல்லது ஹிரண்யகசிபுவைப் போன்ற நாத்திகர்கள், பகவானின் அதிகாரத்தை அலட்சியப்படுத்துவதற்கு முன் கடுந்தவங்களை மேற்கொள்ள வேண்டியிருந்தது. ஆனால் கொடுமையான மரணத்தைப் போன்று அவர்களின் முன்பு பகவான் தோன்றிய போது, உதவியற்றவர்களாக மாறிய அவர்களால் தங்களைக் காப்பாற்றிக் கொள்ள இயலவில்லை. பகவானின் அதிகாரத்தை அலட்சியப்படுத்தும் அளவிற்கு துணிவுள்ள நவீன கால நாத்திகர்களின் நிலையும் இதுதான். சரித்திரம் தொடர்ந்து சுழன்று கொண்டே இருப்பதால், இந்த நாத்திகர்களுக்கும் அதே கதி தான். இறைவனின் அதிகாரத்தை மனிதர்கள் அலட்சியப்படுத்தும் போதெல்லாம், அவர்களைத் தண்டிக்க இயற்கையும் அவளது சட்டங்களும் தயாராக உள்ளன. *யதா யதா ஹி தர்மஸ்ய க்லானி:*, "எப்போதெல்லாம் தர்மம் சீர்குலைந்து அதர்மம் ஆதிக்கம் செலுத்துகின்றதோ, ஓ அர்ஜுனா, அப்போதெல்லாம் நான் தோன்றுகின்றேன்" என்னும் பகவத் கீதையின் (4.7) பிரபலமான பதத்தில் இஃது உறுதி செய்யப்பட்டுள்ளது.

முழுமுதற் கடவுள் பரிபூரணமானவர் என்பது எல்லா ஸ்ருதி மந்திரங்களிலும் உறுதி செய்யப்பட்டுள்ளது. பரிபூரணமான இறைவன் ஜடத்தின் மீது தனது பார்வையை செலுத்தி எல்லா உயிர்வாழிகளையும் படைத்ததாக ஸ்ருதி மந்திரங்கள் கூறுகின்றன. உயிர்வாழிகள் அனைவரும் பகவானின் அம்சங்களாவர், பரந்த பௌதிக படைப்பினை ஆன்மீகப் பொறிகளைக் கொண்டு அவர் கருவூட்டுகிறார்; இவ்வாறாக, பல்வேறு அற்புத பொருள்களை தோற்றுவிக்கும் படைப்பு சக்திகள் இயக்கத்தைப் பெறுகின்றன. கைக்கடிகாரம் செய்பவனை விட இறைவன் திறமை மிக்கவரல்ல என்று நாத்திகன் வாதிடக் கூடும், ஆனால் கடவுள் சந்தேகமின்றி மிகவும் உயர்ந்தவர். ஏனெனில், அவர் தயாரித்த இயந்திரங்கள் ஆண், பெண் என்ற உருவில் உள்ளன. ஆண், பெண் வடிவிலுள்ள பலதரப்பட்ட அந்த இயந்திரங்கள், இறைவனின் தொடர்ந்த கவனத்திற்கான அவசியமின்றி, இதே போன்ற எண்ணற்ற இயந்திரங்களை உற்பத்தி செய்து கொண்டு போகின்றன. அதே போன்று மனிதனொருவன் ஒரு ஜோடி இயந்திரங்களை உற்பத்தி செய்து, இவ்வியந்திரங்கள் மேற்கொண்டு இயந்திரங்களை அவனுடைய தேவையின்றியே உற்பத்தி செய்துகொள்ள முடிந்தால், அவன் கடவுளின் புத்தியை அணுகலாம். ஆனால் அது சாத்தியமல்ல; ஏனெனில், ஒவ்வோர் இயந்திரமும் தனித்தனியாக இயக்கப்பட வேண்டும். ஆகவே, இறைவனைப் போல் சிறப்பாக எவராலும் படைக்க இயலாது. இறைவனுக்கு *அஸமௌர்த்வ* என்ற பெயருண்டு. அவருக்குச் சமமானவரோ அவரை விட உயர்ந்தவரோ எவரும் இல்லை என்பது இதன் பொருள். *பரம ஸத்யம்* எனப்படுபவர், தமக்குச் சமமானவரோ அல்லது தம்மை விட உயர்ந்தவரோ இல்லாதவர். ஸ்ருதி மந்திரங்களில் இஃது உறுதி செய்யப்பட்டுள்ளது. ஜடப் பிரபஞ்சத்தின் படைப்பிற்கு முன், அனைவருக்கும் எஜமானராகிய பகவான் மட்டுமே இருந்தார் என்று கூறப்பட்டுள்ளது. அந்த பகவானே பிரம்ம தேவருக்கு வேத அறிவை உபதேசித்தார். அந்த பகவானே எல்லா

வழிகளிலும் மதிக்கத்தக்கவர். பௌதிக பந்தத்திலிருந்து விடுபட விரும்பும் ஒவ்வொருவரும் அவரிடம் சரணடைய வேண்டும். இது பகவத் கீதையிலும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் தாமரைத் திருவடிகளில் ஒருவன் சரணடையவில்லையெனில், அவன் குழம்பிய நிலையில் இருப்பான் என்பது நிச்சயம். எல்லாக் காரணங்களுக்கும் காரணம் கிருஷ்ணரே என்று பகவத் கீதையில் உறுதி செய்யப்பட்டுள்ளது. அதனை முழுமையாக அறிந்து, கிருஷ்ணரின் தாமரைத் திருவடிகளில் சரணடையும் புத்திசாலி மனிதன், அத்தருணத்தில்தான் மஹாத்மாவாக ஆகிறான். ஆனால் அத்தகு மஹாத்மாக்களைக் காண்பது மிகவும் அரிதாகும். முழுமுதற் கடவுளே எல்லா சிருஷ்டிகளுக்கும் மூல காரணமாக இருப்பவர் என்பதை அத்தகு மஹாத்மாக்களால் மட்டுமே அறிய முடியும். மற்ற எல்லா உண்மைகளும் அவரையே சார்ந்துள்ளதால், அவர் பரம உண்மை, அல்லது பரம சத்தியம் எனப்படுகிறார். அவர் அனைத்தையும் அறிந்தவர், மாயை என்பது அவரிடம் கிடையாது.

ஸ்ரீமத் பாகவதத்தைத் தொகுத்தவர் ஸ்ரீ வியாசதேவர் அல்ல என்று சில மாயாவாத அறிஞர்கள் வாதிடுகின்றனர். வோபதேவர் என்பவரால் எழுதப்பட்ட நவீன படைப்பே இஃது என்று அவர்களில் சிலர் முன்னுரைக்கின்றனர். இத்தகைய அர்த்தமற்ற வாதங்களை முறியடிப்பதற்காக, பழமை வாய்ந்த பல்வேறு புராணங்களில் பாகவதத்தைப் பற்றிய குறிப்புகள் இருப்பதை ஸ்ரீ ஸ்ரீதர ஸ்வாமி சுட்டிக் காட்டுகின்றார். பாகவதத்தின் இந்த முதல் ஸ்லோகம் காயத்ரி மந்திரத்துடன் ஆரம்பமாகின்றது. இதைப் பற்றிய குறிப்பு, மிகமிகப் பழைய புராணமாகிய மத்ஸ்ய புராணத்தில் காணப்படுகிறது. ஆன்மீக கருத்துகளை விளக்கும் பல்வேறு நிகழ்ச்சிகள், காயத்ரி மந்திரத்தை ஆரம்பமாகக் கொண்டு வழங்கப்பட்டுள்ளன என்று அப்புராணத்தில் கூறப்பட்டுள்ளது, அது பாகவதத்திலுள்ள காயத்ரி மந்திரத்தைப் பற்றிய குறிப்பாகும். மேலும், விருத்ராசுரனின் வரலாறும் அங்கு கூறப்பட்டுள்ளது. இச்சிறந்த காவியத்தை பௌர்ணமி தினத்தன்று யாரொருவர் அன்பளிப்பாக வழங்குகின்றாரோ அவர் முழுமுதற் கடவுளிடம் திரும்பிச் செல்லுதல் என்னும் வாழ்வின் மிகவுயர்ந்த பக்குவத்தை அடைவர். பதினெட்டாயிரம் ஸ்லோகங்களை உள்ளடக்கிய பன்னிரண்டு காண்டங்களைக் கொண்டது ஸ்ரீமத் பாகவதம் என்று மற்ற புராணங்களில் பாகவதத்தைப் பற்றி தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. பத்ம புராணத்தில் கௌதமருக்கும் அம்பரீஷ மஹாராஜனுக்கும் இடையில் நிகழ்ந்த உரையாடலில் பாகவதத்தைப் பற்றிய குறிப்பு உள்ளது. அதில், பௌதிக பந்தத்திலிருந்து விடுபட விரும்பினால், பாகவதத்தை தினமும் கவனமாகப் படிக்க வேண்டும் என்று மன்னர் அறிவுறுத்தப்படுகிறார். பாகவதத்தின் அதிகாரம் குறித்த எந்தவித சந்தேகத்திற்கும் இடமில்லை என்பது இச்சூழ்நிலைகளிலிருந்து தெளிவாகிறது. கடந்த ஐநூறு ஆண்டுகளுக்குள், ஜீவ கோஸ்வாமி, ஸநாதன கோஸ்வாமி, விஸ்வநாத சக்ரவர்த்தி, வல்லபாசாரியர் போன்ற பல புலமை பெற்ற பண்டிதர்களும் ஆசார்யர்களும், பகவான் ஸ்ரீ சைதன்யரின் காலத்துக்குப் பிறகும் கூட, பாகவதத்தின் மீது விரிவான வியாக்கியானங்களை அருளியுள்ளனர். இந்த தெய்வீக விஷயங்களை சிறந்த முறையில் அனுபவிக்கும் பொருட்டு, ஆர்வமுள்ள மாணவன் ஒருவன் இவற்றை நன்றாகக் கற்றுணர முயற்சிப்பான்.

ஸ்ரீல விஸ்வநாத சக்ரவர்த்தி தாகூர், எவ்வித பௌதிகக் களங்கமும் இல்லாத, ஆதியானதும் தூயதுமான காம வாழ்க்கையை குறித்து விளக்கம் கொடுத்துள்ளார். ஜடப் படைப்பு முழுவதுமே காம வாழ்வின் கொள்கையுடன் இயங்கி வருகிறது. நவீன நாகரிகத்தில், காம வாழ்வே எல்லாச் செயல்களுக்கும் மையமாகத் திகழ்கின்றது. ஒருவன் தனது முகத்தை எங்கு திருப்பினாலும், அங்கு காம வாழ்வு மேலோங்கி இருப்பதைக் காண்கிறான். ஆகவே, காம வாழ்வு பொய்யல்ல. அதன் உண்மை நிலை ஆன்மீக உலகில் அனுபவிக்கப்படுகின்றது. பௌதிக காம வாழ்வு என்பது, உண்மையான வாழ்வின் திரிபடைந்த பிம்பமே அன்றி வேறில்லை. உண்மையான வாழ்வு பரம்பொருளிடம் இருக்கிறது. எனவே, பரம்பொருள் அருவமாக இருக்க முடியாது. அருவமாக இருக்கும் பட்சத்தில், தூய காம வாழ்வுடன் இருப்பது சாத்தியமல்ல. பரம்பொருளின் உருவமற்ற தன்மைக்கு அதிக முக்கியத்துவம் வழங்கும் அருவவாதிகள், அதன் விளைவாக, வெறுக்கத்தக்கதான பௌதிக காம வாழ்விற்கு மறைமுகமான ஊக்கத்தை அளிக்கின்றனர். இவற்றின் காரணத்தினால், காமத்தின் உண்மையான ஆன்மீக உருவைப் பற்றிய தகவலை அறியாத மனிதன், திரிபடைந்த பௌதிக காம வாழ்வே எல்லாம் என்று ஏற்றுக் கொண்டுள்ளான். நோயுற்ற பௌதிக சூழ்நிலையிலுள்ள காம வாழ்விற்கும் ஆன்மீகமான காம வாழ்விற்கும் வேறுபாடு உண்டு.

இந்த ஸ்ரீமத் பாகவதம், பாரபட்சமின்றி நடுநிலையுடன் படிப்பவரை தெய்வீகத்தின் மிகவுயர்ந்த பக்குவ நிலைக்கு படிப்படியாக உயர்த்துகின்றது. பலன்நோக்குச் செயல்கள், கற்பனைக் கொள்கைகள், தேவ வழிபாடு ஆகியவற்றை உள்ளடக்கிய ஜட இயற்கையின் முக்குணங்களைக் கடந்துச் செல்வதற்கு இஃது அவருக்கு உதவும். (தொடரும்)

## சந்தா விவரம்

தமிழகத்திலேயே அதிகம் விற்பனையாகும் ஆன்மீக இதழ் என்ற பெருமையை "ஸ்ரீ கிருஷ்ண தரிசனம்" அடைய வேண்டும் என்று பல்வேறு அன்பர்கள் விருப்பம் தெரிவித்துள்ளனர். அவ்விருப்பத்தை நிறைவேற்ற எமது இதழ், மாத இதழாக மாற வேண்டும் என்றும், சந்தா எடுக்க வேண்டும் என்றும் அன்புடன் வற்புறுத்துகின்றனர். அத்தேவைகளை விரைவில் நிறைவேற்ற உள்ளோம்; மே 27 அன்று, ஸ்ரீ நரசிம்மதேவரின் அவதாரத் திருநாளிலிருந்து சந்தாவிற்கு பதிவு செய்யப் போகிறோம். அடுத்து வரும் இதழ்களில் மேலும் விவரங்கள் அறிவிக்கப்படும்.

—பதிப்பகத்தார்

# தத்துவத் துளிகள்

ஸ்வர்க லோக இன்பங்கள் எனக்கு வேண்டாம், முக்தியும் வேண்டாம். பகவான் கிருஷ்ணரின் திவ்யமான லீலைகள் என்னும் அமிர்தம் தினந்தோறும் எனது காதுகளில் வழிந்தோடினால் போதும்.

ஸ்ரீ கவி ரத்னர், பத்யாவளி 2.10

சிறந்த பேச்சாளர், சிறந்த பண்டிதர், வேத இலக்கியத்தின் சிறந்த மாணவர் போன்ற தகுதிகளால் முழுமுதற் கடவுளை அடைய முடியாது. பகவான் யார் மீது திருப்தியுறுகிறாரோ அவரிடம் அவரே தனது ரூபத்தை வெளிப்படுத்துவார்.

கட உபநிஷத் 1.2.23

மற்றவர்களிடமிருந்து நன்மையையும் மரியாதையையும் எதிர்பார்க்கக்கூடிய கேவலமான ஆசையிலிருந்து நாம் விடுபட்ட அதே நாளில், பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் நம்மீது கருணை கூர்ந்து அவரது திருவடிகளின் மீதான பக்தியை நமக்கு அருளுவார்.

ஸ்ரீல பக்திசித்தாந்த சரஸ்வதி தாகூர்

யாரொருவன் உண்மையான கல்வியைப் பயின்றுள்ளானோ, அவன், தனது மனைவியை தவிர அனைத்து பெண்களையும் தாயாகக் காண்கிறான், மற்றவர்களது உடைமைகளை களிமண்ணாகக் காண்கிறான், எல்லா உயிர்களையும் தன்னைப் போலக் காண்கிறான்.

சாணக்கிய பண்டிதர்

எமது கருத்து என்னவெனில் கிருஷ்ணர் ஓர் இந்துவோ முஸ்லீமோ கிருஸ்தவரோ கிடையாது—அவர் புருஷோத்தமரான முழுமுதற் கடவுள், அனைத்திற்கும் உரிமையாளர், பரம அனுபவிப்பாளர், அனைவருக்கும் உற்ற நண்பன். இக்கருத்துகள் எல்லா இடங்களிலும் பரப்பப்பட்டு மக்கள் இதனைப் புரிந்துகொள்ளும்போது, உலகம் முழுவதிலும் அமைதியும் வளமும் நிச்சயம்.

தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர்

தாகத்தினால் தவிக்கும் நாக்கே, சுவையான அமிர்தமான ராதையின் திருநாமத்தினை சுண்டிய பாலான கிருஷ்ணரின் திருநாமத்துடன் கலந்து, நறுமணமிக்க பனிக்கட்டியான தூய அன்பினை அதில் சேர்த்து, கவர்ச்சியான அந்த பானத்தை ஒவ்வொரு கணமும் பருகுவாயாக.

ரகுநாத தாஸ கோஸ்வாமி, ஸ்தவவளி

## கௌடிய வைஷ்ணவ நாள்காட்டி

### ஜனவரி

5—ஸ்ரீ ராமசந்திர கவிராஜர் மறைவு நாள்
ஸ்ரீல கோபால பட்ட கோஸ்வாமி தோன்றிய நாள்

6—ஸ்ரீ ஜெயதேவ கோஸ்வாமி மறைவு நாள்
ஸ்ரீ லோசன தாஸ தாகூர் மறைவு நாள்

10—ஸத்-தில ஏகாதசி விரதம்
மறுநாள் விரதம் முடிக்கும் நேரம் 11:03க்குமேல்

20—ஸ்ரீல விஷ்வநாத சக்ரவர்த்தி தாகூர் மறைவு நாள்
ஸ்ரீல ரகுநாத தாஸ கோஸ்வாமி தோன்றிய நாள்

22—ஸ்ரீ அத்வைத ஆச்சாரியர் தோன்றிய நாள்
(மதியம் வரை விரதம்)

24—ஸ்ரீ மத்வாசாரியர் மறைவு நாள்

25—ஸ்ரீ இராமானுஜாசாரியர் மறைவு நாள்

26—பைமி ஏகாதசி விரதம், வராஹ தேவருக்கான விரதமும் இன்றே அனுசரிக்கப்படுகிறது.
மறுநாள் விரதம் முடிக்கும் நேரம் 06:39–10:31

27—வராஹ துவாதசி, வராஹதேவர் தோன்றிய நாள்

28—நித்தியானந்த திரியோதசி, ஸ்ரீ நித்தியானந்த பிரபு தோன்றிய நாள் (மதியம் வரை விரதம்)

30—ஸ்ரீல நரோத்தம தாஸ தாகூர் தோன்றிய நாள்

### பிப்ரவரி

3—ஸ்ரீல பக்திசித்தாந்த சரஸ்வதி தாகூர் தோன்றிய நாள்
மதியம் வரை விரதம்

10—விஜய ஏகாதசி விரதம்
மறுநாள் விரதம் முடிக்கும் நேரம் 06:37–10:32
ஸ்ரீ ஈஸ்வர பூரி மறைவு நாள்

15—ஸ்ரீ ஜகந்நாத தாஸ பாபாஜி மறைவு நாள்
ஸ்ரீ இரசிகானந்தர் மறைவு நாள்

25—அமலகி ஏகாதசி விரதம்
மறுநாள் விரதம் முடிக்கும் நேரம் 06:31–08:56

26—ஸ்ரீ மாதவேந்திர பூரி மறைவு நாள்

28—கௌர பூர்ணிமா, ஸ்ரீ சைதன்ய மஹாபிரபுவின் அவதாரத் திருநாள், மாலை வரை விரதம்

(தமிழகத்தின் மையப் பகுதியான திருச்சியை அடிப்படையாக வைத்து கணக்கிடப்பட்டுள்ளது, ஏகாதசி விரதத்தை முடிப்பதற்கான நேரம் மற்ற இடங்களில் சற்று வேறுபடும்.)

# தமிழகத்திலுள்ள இஸ்கான் கோவில்களின் முகவரிகள்

**ஓசூர்**—இராமர் கோவில் வளாகம், நேதாஜி ரோடு, ஓசூர் - 635019. போன்: (04344) 226222.
இ-மெயில்: iskcon_hosur@rediffmail.com

**கும்பகோணம்**—56/49, சௌராஷ்டிரா பெரிய தெரு, கும்பகோணம் - 612001. போன்: 99949 49108.
இ-மெயில்: vanamali.gopal.jps@pamho.net

**கோயமுத்தூர்**—ஸ்ரீ ஜகன்னாதர் கோயில், ஹரே கிருஷ்ண நிலம், 100 அடி நியூ ஸ்கீம் ரோடு, CIT கல்லூரி எதிர்புறம், கோயமுத்தூர் - 641014. போன்: (0422) 2626508/9.
இ-மெயில்: bhakti.vinoda.swami@pamho.net
www.iskcon-coimbatore.org

**சென்னை**—ஹரே கிருஷ்ண நிலம், பக்திவேதாந்த ஸ்வாமி சாலை, கிழக்குக் கடற்கரைச் சாலை, சோழிங்கநல்லூர் அஞ்சல், அக்கரை, சென்னை - 600041. போன்: (044) 24530920/21/22/23, 24343266, 32911472
இ-மெயில்: info@iskconchennai.com
www.iskconchennai.com

அலுவலக முகவரி: புது எண் 23, முதல் மெயின் ரோடு, கே.பி. நகர், அடையார், சென்னை - 600020. போன்: (044) 24456199. இ-மெயில்: iskconoffice@gmail.com

**சேலம்**—ஹரே கிருஷ்ண நிலம், கருப்பூர், சேலம் - 636012. போன்: (0427) 2001686, 2345545, 94421 53427.
இ-மெயில்: iskcon.salem@pamho.net
www.iskconsalem.com

**திருநெல்வேலி**—10B, திருவனந்தபுரம் ரோடு, வண்ணாரப் பேட்டை ரவுண்டானா அருகில், திருநெல்வேலி - 627002.
போன்: (0462) 2501640.
இ-மெயில்: iskcon.tirunelveli@pamho.net

**நாகர்கோயில்**—418, KP ரோடு, நாகர்கோயில் - 629002.
போன்: 98946 00108.
இ-மெயில்: iskcon.kanyakumari@gmail.com

**மதுரை**—12/37. மணிநகரம் மெயின் ரோடு, மதுரை - 625001.
போன்: (0452) 2346472.
இ-மெயில்: iskcon.madurai@pamho.net

**வேலூர்**—10/12, 10வது கிழக்குக் குறுக்குத் தெரு, காந்திநகர், வேலூர் - 632006.
போன்: (0416) 2241654, 94429 53417.
இ-மெயில்: akincan_bvks97@rediffmail.com

**ஸ்ரீரங்கம், திருச்சி**—ஹரே கிருஷ்ண நிலம், 107, அம்மா மண்டபம் ரோடு, ஸ்ரீரங்கம், திருச்சி - 620006.
போன்: (0431) 2433945.
இ-மெயில்: ratishadas@yahoo.co.in

---

**பாண்டிச்சேரி**—57, MG ரோடு, வரதராஜ பெருமாள் கோவில் எதிரில், பாண்டிச்சேரி - 605001.
போன்: (0413) 2221402, 94434 68923, 99408 64086.
இ-மெயில்: sarvananda2003@yahoo.com

---

## சிறிய (நாமஹட்டா) மையங்கள்

**தேன்கனிக்கோட்டை**—கிருஷ்ண பலராமர் ஆலயம், ஹரே கிருஷ்ண ரோடு, அன்செட்டி மெயின் ரோடு, தேன்கனிக்கோட்டை. போன்: 93623 10556.
இ-மெயில்: adgd.jps@gmail.com

**நாமக்கல்**—இஸ்கான் நாமஹட்டா மையம், ஸ்ரீ செல்வம் பிளாசா மாடியில், நரசிம்மர் கோவில் எதிரில், கோட்டை, நாமக்கல் - 637001.
போன்: 94421 53427, 97885 84802.

**பெரம்பூர், சென்னை**—7C, வாசன் தெரு, பெரம்பூர், சென்னை - 600012. போன்: 98400 87067.
இ-மெயில்: jai.gopinath.jps@pamho.net

**நெய்வேலி**—E53, அண்ணா சாலை, பிளாக்-26, நெய்வேலி - 607803. போன்: 98945 30533.

**தர்மபுரி**—180, பை-பாஸ் ரோடு, அரசு மருத்துவமனை அருகில், சேலம் மெயின் ரோடு, தர்மபுரி.
போன்: 97886 16028.

இவை தவிர மேலும் பல்வேறு இடங்களில் சிறிய அளவில் நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. மேலும் விவரங்களுக்கு தங்களுக்கு அருகிலுள்ள முக்கிய மையங்களை தொடர்பு கொள்ளவும்.

இந்தியாவின் இதர இடங்களில் உள்ள மையங்களின் முகவரியையும் உலகளாவிய மையங்களின் முகவரியையும் அறிய, தங்களுக்கு அருகிலுள்ள இஸ்கான் மையங்களை அணுகவும். அல்லது www.krsna.com என்ற இணைய தளத்தில் காணவும்.

ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே
ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே



ஹரே கிருஷ்ண மஹாமந்திரத்தை கீர்த்தனம் செய்வதால், காலங்காலமாக நம் இதயத்தில் படிந்துள்ள எல்லா அழுக்குகளும் நீங்கும், கட்டுண்ட வாழ்வில் தொடரும் பிறப்பு, இறப்பு என்னும் தீ அணைந்துவிடும்; நிலவு தன் குளிர்ந்த ஒளியினால் எல்லாருக்கும் நன்மையளிப்பதைப் போல, இந்த சங்கீர்த்தன இயக்கம் மனித குலத்திற்கு மாபெரும் வரப்பிரசாதமாகும். இது தெய்வீக ஞானத்திற்கு உயிரூட்டுகிறது, பேரானந்த பெருங்கடலை பெருகச் செய்கிறது, எப்பொழுதும் நாம் விரும்பும் அமிர்தத்தை முழுமையாக சுவைக்கச் செய்கிறது. அத்தகு ஸ்ரீ கிருஷ்ண சங்கீர்த்தனத்திற்கு எல்லா புகழும் உரித்தாகட்டும்.

[ஸ்ரீ சிக்ஷாஷ்டகம் 1]